உ

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

| தொகுதி | சித்தார்த்தி ௵ தை௴ க௳ | பகுதி |
|---|---|---|
| 5 | 1920௵ ஜனவரி௴ 14௳ | 7 |

## கடவுள் வணக்கம்.

பாகத்தி னற்கவிதை பாடிப் படிக்கவோ
பத்திநெறி யில்லை வேத
பாராய ணப்பனுவன் மூவர்செய் பனுவலது
பகரவோ விசையு மில்லை
யோகத்தி லேசிறிது முயலவென் றாற்றேக
மொவ்வாதிவ் வூண்வெ றுத்தால்
உயிர்வெறுத் திடலொக்கு மல்லாது கிரியைக
ளுபாயத்தி னற்செய் யவோ
மோகத்தி லேசிறிது மொழியவிலை மெய்ஞ்ஞான
மோனத்தி னிற்க வென்றால்
முற்றாது பரிபாக சத்திக ளனேகநின்
மூதறிவி லேயெ ழுந்த
தாகத்தி லேவாய்க்கு மமிர்தப்பிர வாகமே
தன்னந் தனிப்பெ ருமையே
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்த சிவமே.

மறக்கின்ற தன்மை யிறத்தலொப் பாகு மனமதொன்றிற்
பிறக்கின்ற தன்மை பிறத்தலொப் பாகுமிப் பேய்ப்பிறவி
இறக்கின்ற வெல்லைக் களவில்லை யேயிந்தச் சன்மவல்லல்
துறக்கின்ற நாளெந்த நாள்பர மேசின் றொழும்பனுக்கே.

---

கற்றும் பலபல கேள்விகள் கேட்டுங் கறங்கெனவே
சுற்றுந் தொழில்கற்றுச் சிற்றின்பத் தாடு சுழலினென்னுங்
குற்றங் குறைந்து குணமே விடுமன்பர் கூட்டத்தையே
முற்றுந் துணையென நம்புகண் டாய்சுத்த மூடநெஞ்சே.

# ஆனந்தபோதினி

சித்தார்த்தி௵ தை௴ ௧௨

## "தந்தைதாய்ப் பேண்"

இவ்வாக்கு நமது மூதாட்டியாராகிய ஔவை பிராட்டியார் அருளியதென்பது யாவருமறிந்ததே. "தந்தைதாய்—(உன்) தகப்பனையும் தாயாரையும், பேண்— (நீ) காப்பாற்று" என்பதே யிதன் பொருள். இதைப்பற்றி இலக்கிய இலக்கணங்களை விரிவாய்க் கூற வெண்ணி நாம் இதை யெழுதக் கருதவில்லை. ஏனெனில் இதைப்பற்றிய உலக ஒழுக்கம் எப்படி நிகழ்கிறது? நாம் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும்? என்பதையே நாம் இப்போது அறிந்து அதன்படி நடந்துகொள்ள வேண்டும். ஆகையால் பெற்றோரை யுடையோர் முக்கியமாய் இதிற் கருத்து வைத்து இதை வாசித் துணரும்படி வேண்டிக் கொள்கிறோம். மாணாக்கர்கள் இதை நன்றாய்க் கவனிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தாய்தந்தையர் நமக்காக இப்படிக் கஷ்டப்பட்டார்கள், அப்படிக் கஷ்டப்பட்டார்கள், நம்மை எவ்வளவோ அருமையாய் வளர்த்தார்கள் என்று நூல்களிற் கூறக்காண்கிறோம். ஆனால் நாம் அதை நேரிற் கண்டதாய் நமக்குச் சற்றும் புலப்படவில்லை. ஏனெனில் நாம் பிறந்தது முதல் நமக்குச் சுமார் 10-12 வயது வருந்தனிலும் நம்வாழ்நாட்களில் நடந்த எந்த விஷயமும் பிறகு நமக்குக் கவனத்தில் கொஞ்சப்கூட இல்லை. ஆகையால் நமது பெற்றோர் அக்காலத்தில் நமக்கு என்னசெய்தார்களென்பது நமக்குத்தெரியாது. அனேகர்க்குத் தாய்தந்தையரின் அருமை மனதில் உறுத்தாததற்கு இதுவே காரணமாகும். ஆகையால் நண்பர்களே! இப்போது நாம் ஒரு திருட்டாந்த பூர்வக மாகவேனும் அந்த உண்மையைக்காண முயலவேண்டும். பெரும்பாலும் நமக்குக் குழந்தைகள் ஜனித்து நம் மக்களை நாம் வளர்க்கும் போது, நமது தாய்தந்தையரும் நம்மைப் போன்றே இப்படி மிக்க கஷ்டங்களையும், துயரையும் அனுபவித்தே நம்மை வளர்த்திருப்பார்கள் என்று நம்மனதிற்குத் தோற்றலாகும். ஆனால் அந்த அனுபவ அறிவை நாம் அடையுங்காலத்திற்குமுன்பே

நம்பெற்றோர் பரகதியடைந்திருக்கலாகும். ஆதலின்"அய்யோ! நாம் இதையறியாமல் நம்பெற்றோரைச் சரியாய்க் கவனித்து அவர்களை யாதரணை செய்யாது பராமுகமா யிருந்து விட்டோமே" என்று விசனப்படலாமே யன்றி, மற்றபடி நாமடைந்த அனுபவ அறிவால் ஒரு பயனுமில்லை.

மேற்கண்டபடி நாம் மக்களைப் பெற்றபின் நமது பெற்றோர் அருமை நமக்குப் புலப்படும் என்பதற்கு ஒரு திருட்டாந்தகரமான உலக வதந்தி ஒன்றுண்டு. அதாவது;—ஒருவன் ஒருநாள் கொடிய வெயில் காய்ந்துகொண் டிருக்கையில் நடுப்பகலில் தன் வீட்டுக் கூரைமேலேறி அங்கு கலைந்துபோயிருந்த ஓடுகளைச் சரிப்படுத்திக் கொண் டிருந்தான். அதைக்கண்ட அவன்தாய் மனம் பதைத்து, "அடே குழந்தாய்! வெயில் அதிக தீட்சணியமா யிருக்கிறது. அய்யோ உன்மூளை உருகிவிடும். தலைவலி மயக்கம் வந்துவிடும். சீக்கிரம் கீழே இறங்கிவிடு" என்று பரிதபித்தாள். அவனோ "நீ போ வெயில் ஒன்றும் செய்துவிடாது. உனக்கென்ன அதைப்பற்றி? இன்னும்கொஞ்சம் வேலையிருக்கிறது. அதை முடித்துவிட்டுத்தான் வருவேன்" என்றான். தான் என்ன சொல்லியும் தன்மகன் கேளாததைக்கண்ட தாய் உடனே வீட்டிற்குள் சென்று அங்கு படுத்திருந்த சுமார் ஒருவருட வயதுடைய தன் பேரப்பிள்ளையை யெடுத்து வந்து மேல்கூரை யில்லாத முற்றத்தில் ஒரு பாயைவிரித்து அதில் அக்குழந்தையைக் கிடத்தினாள். தன் குழந்தை யவ்வாறு வெயிலில் போடப்பட்டதைக் கண்டதே அம்மனிதன் பதைபதைத்துக் கோபத்தோடு கூச்சலிட்டுக் கொண்டு உடனே கீழிறங்கி வந்து, அதை யெடுத்துக்கொண்டு தன் தாயைநோக்கி "உனக்குப் புத்தியில்லையா? என்மனம் பதைக்கும்படி இப்படியும் குழந்தையை யிந்தவெயிலில் படுக்கவைக்கலாமா..." என்று கோபித்தான்.

தாயார்:—"அடே குழந்தாய்! சற்று நிதானித்துச்சிந்தித்துப் பார். நீ எவ்வளவோ அருமையாய் உன்குழந்தையைப் பாதுகாத்து வருகிறாய் என்றும், அது வெயிலி லிருப்பதைக்காண உன்மனம் சகியாதென்றும் நான் அறிவேன்..." என்பதற்குள்,

மகன்:—"அது தெரியுமே, ஏன் அப்படிச் செய்தாய்?" என்றான்.

தாய்:—பொறு பொறு, அது தெரிந்ததால்தான் அப்படிச்செய்தேன். ஏனெனில் "நம்மைப்போல் எதிரியும் என்றும், நீ அருமையாய் உன் பிள்ளையைப் பாதுகாத்து வளர்ப்பதுபோல் தான் நானும் என் பிள்ளையை யின்னும் பாதுகாத்து வருகிறேன் என்றும், என்பிள்ளை வெயிலி லிருப்பதைக்காண எனக்கும் மனந்தாளாதென்பதும் உன்மனதிற் படவேண்டு மென்றே யிப்படிச் செய்தேன்" என்றாள்.

இதைக் கேட்டதே யம்மனிதன் நல்லுணர் வடைந்து தன் தாயைநோக்கி "அம்மா! நீ கூறுவது உண்மையே, தாயின் அருமை யித்தகைய தென்று இப்போதுதான் என் புத்தியிற்பட்டது. இனி யுனக்கு மனவருத்தம் வரும்படி நடக்கமாட்டேன்" என்றான்.

மக்களைப் பெறுதவர்களும் வேறு திருட்டாந்தங்களால் நம் தாய்தந்தையர் நம்மை யெவ்வளவு கஷ்டப்பட்டுக் காப்பாற்றிவளர்த் தார்கள் என்பதை யறிந்து கொள்ளலாம். எவ்வாறெனின், நமக் குச் சமீபத்தில் இருக்கும் ஒருஸ்திரீ ஒரு குழவியையீன்றது முதல் கொஞ்சகாலம் வரையில் அவள் அக்குழந்தை விஷயமாய் நடந்து கொள்ளும் மாதிரியைக் கவனித்து வருவதோடு, அப்போதைக் கப் போது அக்குழந்தையின் க்ஷேமத்தைப்பற்றி யவளை விசாரித்துக் கொண்டு வந்தால், கட்டாயம் நமது தாய் நம்மைக் காப்பாற்ற இப் படித்தான் பாடுபட்டாள் என்று நாம் அறிந்துகொள்ளலாம். இதில் செல்வர், ஏழைகள் என்ற வித்தியாசத்தைச் சிந்திக்கவேண்டாம். விசேஷமாய் ஏழைத்தாயையே கவனிக்கவேண்டும். செல்வமுடைய தாய்க்குத் தம்மக்களை வளர்ப்பதில் அவ்வளவு கஷ்டங்களும் வியாகூலமும் ஏற்படுவதில்லை.

ஒரு தாய் தன்குழந்தையை வளர்க்கப் படும்பாட்டையும், அனுபவிக்கும் கஷ்டங்களையும், அய்யோ நமது குழந்தை கேட்கும் வஸ்துவை வாங்கிக்கொடுக்க நம்மிடம் பொருளில்லையே என்றுபடும் துயரையும், குழந்தை வியாதியுற்றபோது அதற்கு வேண்டிய சிகிச் சைசெய்து இரவும்பகலும் நித்திரையின்றி வருந்துவதோடு, அய் யோ குழந்தை பிழைக்குமோபிழைக்காதோ வென்று அவள் அனு பவிக்கும் சகிக்கொணாத் திகிலையும் வியாகூலத்தையும், இன்னும் பல கஷ்டங்களையும் விவரித்துக் கூறவேண்டுமாயின் இடம்போதாது. ஆதலின் மிகச் சுருக்கமாய்க் கூறிவிட்டு விஷயத்தைத் தொடங்கி முடிக்கின்றோம்.

வியாதியாயுள்ள ஒருவனுக்கு ஆகாரத்தில், அது எவ்வளவு உயர்ந்ததா யிருந்தாலுங்கூட, விருப்ப மிருப்பதில்லை; பிறர் கட்டா யப்படுத்துவதற் கஞ்சி விஷத்தை விழுங்குவதுபோல் கொஞ்சம் ஆகாரம் உட்கொள்வதே கஷ்டம். அவன்கூட வைத்தியர் ஔடத மளித்து, "இந்த மருந்திற்குச் சுட்ட உப்பையும் சுட்ட புளியை யுமே சேர்த்துக் கொள்ளவேண்டும், தாளிதம்கூடாது, பருப்புத் துவையல் தவிர வேறுபதார்த்தம் உட்கொள்ளலாகாது" என்றால் இடி விழுந்து, வெறுப் படைந்து சலித்துக் கொள்கிறான். தாயாரோ தன்குழந்தைக்கு நோய்வந்தால் அதற்கு ஔடதத்தை மட்டும் அளித்துவிட்டுக் கடும்பத்தியத்தைத்தான் அனுபவிக்கிறாள். தேக சுகத்தோடு உருசியறிந்து அறுசுவை பதார்த்தங்களோடு பொ

சித்துக்கொண் டிருப்பவர்கள் அத்தகைய பத்திய ஆகாரம் அருந்த வேண்டுமாயின் எவ்வளவு கஷ்டமிருக்கிற தென்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். ஒரு ஸ்திரீக்கு அதிலும் நமது புண்ணிய பூமியில் ஜனித்த ஒரு மாதிற்கு அவள் உயிர்கூட அவள் கற்பிற்கு மிஞ்சியதல்ல. தன் கற்பிற்காகத் தன் பிராணனையே தத்தம்செய்து விடுவாள். அதைக் காப்பாற்றிக்கொள்ள கொலையும் செய்யத்துணிந்து விடுவாள். அப்படிப் பட்டவள் தன் குழந்தைக்கு ஆகாரம் கிடைக்கா விட்டால், அதைக் காப்பாற்றத் தனக்கு அவ்வளவு அருமையாகிய கற்பையும் பறிகொடுத்து விடுவாளெனின், நாம் இன்னும் அதிகமாய்க் கூறக்கூடியது என்னுளது?

இனி அத்தகைய தாய் தந்தையர்க்கு நாம் என்ன பிரதியுபகாரம் செய்யவேண்டும், அவர்களை எப்படிக் காப்பாற்றவேண்டும் என்பதைப்பற்றிக் கவனிப்போம். தாயார் நமக்காக ஒருநாள் பட்டகஷ்டத்திற்கு மூன்று உலகங்களையும் அவள் பாதங்களில் காணிக்கையாக வைத்தாலும் சற்றும் ஈடாகாது என்று ஆன்றோர் கூறியுளர். வயது முதிர்ந்து சக்திகுன்றி யிருக்கும் அவர்களுக்கு நாம்செய்ய வேண்டிய கைம்மாறு என்ன விருக்கிறது? அவர்கள் இருவரில் ஒருவர்செய்கைக்கே யீடுசெய்ய நம்மால் முடியாது. தாயார் நமக்குச் செய்த பாலூட்டுதல், நம்மைச் சுமந்துசெல்லல், இரவும் பகலும் கண்ணுங் கருத்துமாய்ப் பாதுகாத்தல், நமக்காகத் தான் பத்திய ஆகாரமருந்தல் முதலிய பல தொல்லைகளை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. நாம் செய்வதெல்லாங் கூடி, அவர்களுக்கு ஆகாரமும் உடையுமளித்து அன்போடு ஆதரித்து, அவர்கள் வியாதியுற்றகாலத்தில் வேறு யாரிருப்பினும் நாம் அருகிலிருந்து சிகிச்சை உபசாரம் முதலியவைகளைச் செய்து, முடிவில் அவர்களுக்குச் செய்யவேண்டிய ஈமக்கடனைச் செய்வதேயாகும். முற்றத்துறந்த முனிவராகிய பட்டினத் தடிகளே தம் தாயின் ஈமக்கடனை முடிக்கக் காத்துக்கொண் டிருந்தாரெனின் அந்த விஷயத்தைப்பற்றி நாம் அதிகம் கூறவேண்டுவ தின்றாம்.

இனியவர்களுக்கு ஆகாரம் முதலியவை யளித்துப் பாதுகாப்பதைப்பற்றி நாம் பிரத்தியக்ஷத்தில் கண்ட ஒரு திருஷ்டாந்தமட்டும் கூறுகிறோம்.

சுமார் 45 வயதுடைய மாதுவப்பிராம்மணர் ஒருவர் இருந்தார். அவர் ஜில்லா முன்சீபு கோர்ட்டில் ஒரு இலிகிதர். அவர் காலையில் எழுந்ததும் தேகசுத்தி முதலியவற்றை முடித்துக்கொண்டு சுமார் 75 வயதுடைய தன் தாயாரை யுட்காரச்செய்து அவர் பாதங்களைக் கழுவி சந்தன புஷ்பங்களால் அர்ச்சனை செய்து நமஸ்கரித்துக் கொண்டு கொஞ்சம் ஆகாரம்கொடுத்து உண்ணச்செய்து, பின்பு சென்று தன் இஷ்டதேவதையின் பூசனையை முடிப்பார். பிறகு பகற்போச

னம் ஆயத்தமானதே தன் தாய்க்கு முந்தி ஆகாரம் வட்டிக்கச் செய்து தான் எதிரில் உட்கார்ந்து அன்போடு அந்தம்மாளை யுபசரித்துப்புசிக்கச்செய்து பிறகு தாம்பூலம் நறுக்கிக்கொடுத்து, படுக்கை போட்டு அந்தம்மாளை யதில் உட்காரவைத்து விட்டு விடைபெற்றுச் சென்று, பிறகே தன் மக்களோடு தானும் போசனம் செய்வார். ஒவ்வொரு வேளையிலும், வீட்டில் விருந்தினர் வந்திருக்கும் போதும், எப்போதும், இந்த நெறியினின்று அவர் தவறுவதேயில்லை.

யாவரும் அவ்வாறே நடந்துகொள்வது இக்காலத்தில் அரிதெனினும், நாம் பொசிக்கும்போதேனும் கூடவே அவர்களையும் வைத்துக்கொண்டு அன்போடு உபசரித்து நாம் பொசிக்கும் உணவுப் பொருள்களையவர்களும் பொசிக்கும்படிசெய்து, எதிலும் அவர்களுக்குச் சௌகரியத் தாழ்வு நேராவண்ணம் பாதுகாத்து எந்த விஷயத்திலும் நம்மால் அவர்கட்குக் கிஞ்சிற்றும் மனவருத்தம் நேராவண்ணம் நடந்துகொள்ள வேண்டியது நமது முதற்கடமையா யிருக்கிறது. இதுவே கடவுளுக்குத் திருப்தியை யளிக்கும். இவ்விஷயத்தில் ஒரு ஆடவன் தன் பத்தினி முதலிய அன்னியர்மேல் பொறுப்பைச் சுமத்திவிட்டு அவர்கள்மேல் குற்றம்கூறுவது சற்றும் தகாத செய்கையேயாகும். தாய்தந்தையரின் இரத்தம் நமது தேகத்தில் முழுதும் ஓடிக்கொண் டிருக்கிறபடியால் நமக்குத்தான் அவர்கள் மேல் இயற்கை யன்பிருக்க வேண்டும். அன்னிய குடும்பத்தி லிருந்துவரும் மனைவிக்கு அவ்வன்பு உண்டாவது அரிதினுமரிதே. எங்கோ ஒரு உத்தமியாகிய கற்பரசியே தன் கணவன்பிரியப்படி நடக்க வேண்டிய கடமையை யுன்னி மாமனார் மாமியாரிடம் அவ்வாறு நடந்து கொள்வாள். ஆகையால் ஆடவரே யிப்பொறுப்பை யேற்றுக் கொள்ள வேண்டும். இந்நெறிநின் றொழுகுவோர் ஈசனது அருளைப் பெறுவார்கள் என்பதைப்பற்றி நாம் விவரித்துக் கூற வேண்டுவ தில்லை.

அந்தோ! இக்காலத்தில் பெரும்பாலார் இவ்விஷயத்தில் நேர் மாறாக நடந்து கொள்கிறார்கள். சற்று கல்விகற்று தான் நாகரீகமடைந்து விட்டதாகவும் உயர்ந்த பதவியிலிருப்பதாகவும் மதித்திருக்கும் ஒருவன் கல்வியில்லாத தாய்தந்தையரை மிக்க அலட்சியமாய் நடத்துகிறான். தான் அந்நிலைமைக்கு வந்தது அவர்கள் மிக்க கஷ்டப்பட்டு எடுத்துக்கொண்ட முயற்சியா லென்பதை யவன் சற்றும் கருதுகிறானில்லை. அவர்கள் சாப்பிட்டார்களா இல்லையா என்பதைக்கூட கவனிக்காமலே யிருப்பவர்களும், தாயாருக்குவைத்துள்ள பதார்த்தத்தையும் வாங்கித் தின்றுவிட்டு அவளை வெறுஞ் சாதம் புசிக்கும்படிச் செய்யும் முழுமூட சிகாமணிகளும் இக்காலத்தில் இருக்கிறார்கள். இன்னும் அவர்களை வைவோரும் அடிப்

போரும்கூட உண்டென்பதைப் பிரத்தியட்சமாய்க் காணலாம். ஆனால் இத்தகையோ ரெல்லாம் வேறெவ்வித தானதருமங்கள் செய்யினும் அவை பெருந்தீயில் விழுந்த மழைத்துளிபோல் பயன ற்றுப்போக, இவர்கள் ஆண்டவனுடைய கடுங்கோபத்திற் காளா வார்களென்பது உண்மை. விரிக்கிற்பெருகும்.

ஆதலால் நண்பர்களே! நீங்கள் மேற்கண்ட விஷயங்களை யலட்சியம் செய்யாமல் மனதில் வைத்துத் தாய்தந்தையரைப்பத்தி விசுவாசத்தோடு உபசரித்துப் பாதுகாத்துப் புண்ணியப்பே றடை யும்படி ஆண்டவன் அனுக்கிரகம் செய்ய வேண்டுமாய்ப் பிரார்த் திப்போமாக. ஓம்தத்சத்.

---

## "பெரியாரைத் துணைக்கொள்"

பெரியாரைத் துணைக்கொள் என்றதனால், என்றும் பெரியாரையே நேசிக்க வேண்டும், அவர்கள் நேசத்தை ஒரு பொழுதும் கைவிட லாகாது, அநேகரது பகையைத் தேடிக் கொள்வதனால் வருந் தீமையிலும், ஒரு பெரி யோரது நேசத்தை இழந்துவிடுவதனால் வருந்தீமை பதின் மடங்கு அதிக மாகும் என்று நாம் உணர வேண்டும்.

"பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்"

என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவர் மொழிந்திருக்கின்றனர். மேலும், "சேரிட மறிந்து சேர்" என்ற ஔவையார் திருவாக்கின்படிக் களங்க மில்லாத பொன்போலும் மனத்தினராகிய பெரியோர்களை யறிந்து அவர்களிடத்திற் சேர்ந்து அவர்கள் சொற்படி நடக்க வல்லவர்களுக்கு அறம் பொருள் இன்பம் வீடென்பவைகளில், எதுதா னரிதாகும்? 'கற்பகத் தருவைச் சார்ந்த காகமு மமுதமுண்ணும்' அல்லவோ!

பூர்வம் சோழ ராஜாவின்மேற் கவி பாடிப் பரிசு பெறும் புலவர்களை ஒரு விறகு தலையன் பெண்சாதி பார்த்து, இவர்களெல்லாம் ஒரு வேலையும் செய்து கஷ்டப்படாமற்பாட்டுப்பாடி எளிதிற்பணம் சம்பாதித்துச்சுகமாகச் சீவனஞ் செய்து வர, நம்முடைய புருஷன் மாத்திரம் காலில் கடுமுள் தைக் கக் கட்டை வெட்டிக் கை கால் கடுக்க விறகு விற்று அரை வயிற்றுக் கஞ் சிக்கு மில்லாமல் அவதிப்பட வேண்டியதென்னே? என்று நினைத்து, தன் புருஷனை நோக்கி "நீ சீக்கிரமாக சோழ ராசனிடத்திற்குப் பாட்டுப் பாடிக் கொண்டு போ, நமக்கு நல்ல காலம் வந்தது" என்றாள். அதைக் கேட்ட அவன் தன் மூடத்தனத்தை நினைத்து இரங்கிச் சற்றுத்தேறி வீதிவழியாகப் புறப்பட்டு வந்தான். அப்பொழுது சில சிறு பிள்ளைகள் மரப்பாவையை வைத்து விநோதமாக விளையாடுமிடத்தில் அவர்கள் "மண்ணுண்ணி மாப் பிள்ளையே" என்று சொல்லக் கேட்டு அதை ஞாபகப் படுத்திக்கொண்டு அப்புறம் செல்லுகையில், ஒரு காக்கை "கா" என்று கத்தக்கேட்டு அதை "காவிறையே" என்றும், ஒரு சோலையில் குயில் கூவுவதைக் கேட்டுக் "கூவிறையே" என்றும், ஒரு பிள்ளையார் கோயிலில் பெருச்சாளி ஓடக் கண்டு, அதைக் கல்லெடுத்து அடிக்கப்போய் "உங்களப்பன் கோவிற்

பெருச்சாளி" என்றும் பாடம் பண்ணிக் கொண்டு திரும்பினான். அப்பொழுது, தன் சிநேகன் ஒருவன் எதிர்ப்பட்டு "எங்கே போய் வருகின்றாயென?" இவன் 'பாட்டுக் கற்றுக்கொண்டு வரப்போனேன்; நீயும் கொஞ்சம் கற்பிக்கவேண்டும்" என, அவன் "அடா! கற்பிக்கிறதென்ன? கன்னா, பின்னா, வென்று பாடுகிறது தானே" என, இவன் அதையும் பாட்டென்று நினைத்து முன் தான் கற்றுக்கொண்டவற்றோடு சேர்த்து வைத்துக்கொண்டு அச்சமில்லாமல் கம்பரிடம் சென்று அவரைக்கண்டு கும்பிட, அவர் இவனை நீ யாரென, அவன் "நான் ராஜாவின்மேல் பாட்டுப்பாடிவந்தேன்" என்றான். அவர் "இவன் விறகுதலையன்" என்றும், "நம்மைக்குறித்து யாரோ சொல்லக் கேட்டு அடுத்தான்" என்றும், "அடுத்தவனைக் கை விடலாமா? ஆசீர்வாத சம்ரட்சணை செய்ய வேண்டு மல்லவா" என்றும் எண்ணி அவன் கற்று வந்த பாட்டைக் கேட்டு, தமக்குள்ளே நகைத்துக்கொண்டு, "சரி இப்பாட்டின் கடைசியில் 'மன்னா தென்னா சோழரங்கப்பெருமானே' என்று சேர்த்துக் கொள்" என்று கற்பித்தார். அவர் கற்பித்தபடி அவன் அடுத்த நாள் இராஜசபைக்குச் சென்றபோது கம்பர் அவனைத் தாமிருந்த ஆசனத்தில் "இரு மிரும்" என்று உபசரித்து, பிறகு அவன் பாடின பாடலை யரசர் முன் கூறும்படி யேற்பாடு செய்தார்.

அவன் எவ்வளவும் அச்சமில்லாமல் தைரியத்துடனே "மண்ணுண்ணி மாப்பிளையே, காவிறையே கூவிறையே, உங்களப்பன் கோவிற் பெருச்சாளி, கன்னா பின்னா மன்னா தென்னா, சோழரங்கப் பெருமானே" என்று தான் கற்று வந்த பாட்டைச் சொல்லக்கேட்டு யாவரும் "இது நல்ல பாட்டு" என்று கல கல வெனச் சிரித்தார்கள். அப்போது கம்பரானவர் எழுந்து, யாவரையும் விளித்து "புலவீர்காள்! ஒரு வித்வான் ஒரு கவி பாடி வந்தால் அதன் பொருளை யறியாது மேற் போக்காய்ப் பார்த்துக்கேலி செய்வது தகுதியாமோ? பாடியவரை அதற்குரை கேட்டால் அவர் எளிதில் கூறிவிடுவார்; நம்மில் ஒருவரே யதன்பொருளை வெளியிடுவதுதான் சிலாக்கியம்; அடியேனுக்கு விடை யளித்தால் என் சிற்றறிவிற் கெட்டிய அளவு கூறுகிறேன்" என்றார்.

இதைக் கேட்ட மற்றப் புலவர்களும் அரசரும் "இதென்ன! எவனோ கன்னா பின்னா வென்று வாயில் வந்ததை யுளறினால் இவர் அதற்குப் பொருள் கூறப் போகிறேன் என்கிறாரே, என்னதான் கூறுகிறாரோ பார்ப்போம்" என்று மிக்க வியப்படைந்தார்கள். அரசர் கம்பரை நோக்கி "அவ்வாறே தாமே இதற்கு உரை கூறும்" எனக் கம்ப நாடர் பின் வருமாறு கூறத் தொடங்கி,

இப் பாடல் இலக்கணப்படி இன்னின்ன இலட்சணங்க ளமைந்துள்ளதால், இது இன்னவகைப் பாவாகுமென்று பொருத்தமாகவும் விரிவாகவும் வியாக்கியானம் செய்த பின்னர்,

இதன் பொருள்:—மண்—பூமியை, உண்ணி—உண்டவனாகிய விஷ்ணுவின் அம்சமாய் யாவரையும் இரக்ஷிப்பவனே, மா—இலக்குமியின், பிள்ளையே—புதல்வனே, கா—கற்பகத்திற்கு, இறையே—அரசனாகிய தேவேந்திரனையொத்தவனே, கூ—இப்பூமண்டலத்திகு, இறையே—அரசனே, உங்களப்பன்—உங்கள் தந்தை, கோ—இராசன், வில்—விற்போரில், பெரிசு—பெரிதாகிய, ஆளி—சிங்கம்போல்வான், கன்னா—ஈகையில் கர்ணமகாராசனுக்கொப்பானவனே, பின்னா — தருமகுணத்தில் கர்ணனுக்குப் பின்

தோன்றிய தருமராசனுக்குச் சமதையானவனே, மன்னா—நிலை பெற்றவனே, தென்னா—பாண்டியனை ஒத்தவனே, சோழரங்கப்பெருமானே—இச்சோழ நாட்டைப் பரிபாலனம் செய்யும் பூபதியே, என்று பொருள் கூறிப் பின்னர் விருத்தியுரை முதலிய யாவும் பூரணமாகக்கூறிச் சபையிலுள்ள அனைவரும் பிரமிக்கச்செய்து இந்த வித்வான் மகாகல்விவந்தர் என்று புகழ்ந்தார். இதனைக் கேட்ட சோழராஜன் ஆச்சரியப் பட்டுக் கம்பருடைய சாமர்த்தியத்தை மெச்சி விறகு தலையனுக்குப் பரிசளித்து அனுப்பினார். ஆகையால் சகோதர சகோதரிகளே! நாமும் பெரியோரையடைந்து நன்மார்க்கத்தைக்கொண்டு ஒழுகுவோமாக.

ப. அ. ப. பனையப்ப செட்டி,
ஸ்ரீ. ஷண்முக விலாச ரீடிங் ரூம் காரியதரிசி,
நெற்குப்பை.

---

## சிறுவர்களுக்குரிய சிறந்த உபதேசம்

சிறுவர்களே! மாணவர்களே! நீங்கள் ஒவ்வொருவரும் கல்வியிலே பெரியவனாக முயலவேண்டும். கல்விக்குத் தன் காலத்தைச் செலவழிப்பவன் என்றும் அழியாத புகழ் பெறுவான் என்பது திண்ணம். கல்வியே அறிவின் அபிவிருத்திக்கு ஆதாரம். கல்வி வளர வளர உங்கள் அறிவும் பிரகாசமடையும். கல்வி யறிவு கைவரப் பெற்றவனே கண்கள் பெற்றவனாவன். கல்வியில்லாதவன் முகத்தில் இரண்டு புண்களுடையவனாவன். உங்களுடைய முகத்திலுள்ள இரண்டு கண்களுக்குப் பதிலாக இரண்டு புண்களிருக்குமாயின் எப்படியிருக்கும்? அந்தோ! அதனினும் துன்பம் வேறு வேண்டுமோ? அது போலவே கல்விச் செல்வம் பெறாத விடத்தும் துன்பம் உண்டா மென்பது திண்ணம். கல்வி யொருவராலும் கவரப்படாத செல்வம்; பிறருக்குக் கொடுக்குந் தோறும் வளர்வது; நம்மை அறியாமை யென்கிற பெரிய படுகுழியிலிருந்து கரையேற்றுந் தெப்பம் போன்றது; அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் தருவது. கல்வி யென்னும் செல்வம் படைத்தவன் என்றைக்கும் கல்விமானாகவே இருப்பான். பொருட் செல்வம் படைத்தவர்களில் இன்று இலட்சாதிபதியாயிருப்பவர் நாளைக்கு பிச்சைக்காரராவது பிரத்தியட்சம்.

கற்றவனுக்குச்சென்றவிட மெல்லாம் சிறப்புண்டாம். அவன் வாயைத் திறந்து பேசத் தொடங்கினால் ஆயிரம்பேர் அவனுடைய வாயைப் பார்த்துக் கொண்டு நிற்பார்கள். நிற்பதோடிராமல், "நாம் இளம் வயதில் படித்தோ மில்லையே, இவ்வருமையான விஷயங்களை யெல்லா முணர"— என்று வருத்தமுங் கொள்வார்கள். கல்வியறிவு கைவந்தவன் தேச க்ஷேமத்திற்குரிய அரிய பெரிய செய்கைகளைச் செய்து பெரும் புகழ் பெறுவானென்பதில் ஐயமில்லை. பலசொல்வானேன்! ஒரு பணக்காரன் செய்வதைவிட மேலான பல செய்கைகளையும் இவன் செய்வான். கல்விமானே ஈசுவரனையறியும் பரம ஞானத்தையும் பெறுவான்.

கல்வி கரையிலவாம். ஆனால் மனிதனுக்குள்ள வாழ்வுநாள் சொற்பமாம். ஆகையால் இளமையிலேயே கல்வி பயில வேண்டியது இன்றியமை

யாத கடமை யெனக் கொண்டு நாடோறும் சோம்பலில்லாமலும் கவனத்தை வேறிடம் செலுத்தாமலும் கொஞ்ச நேரமேனும் நல்ல நூல்களை அதாவது, உங்களை இழிவான நடவடிக்கைகளுக்கு இழுத்துக்கொண்டு போகத்தக்க நூல்களைப் படிக்காமல், நல்ல வழிக்குக் கொண்டுவரும் நூல்களையே படியுங்கள். படிப்பதோடு நில்லாமல் படித்தவைகளை நன்ருய் மனத்திலே பதிய வைத்துக் கொள்ளுங்கள். அவற்றை அடிக்கடி சிந்தித்துப் பாருங்கள்.

உலகத்தில் நல்லவர்களும் பொல்லாதவர்களும் நிறைந்திருப்பது போல நல்ல நூல்களும் தீய நூல்களும் நிறைந்திருக்கின்றன. எப்படி நல்லவர்களோடு பழகுகிறவன், நல்ல பையனுவனே அப்படியே நல்ல நூல்களைப் படிப்பவனும் நல்லவ ளுவா னென்பதில் ஐயமில்லை. ஒரு புத்தகத்தைப் படிப்பின் அது நல்லதாயிருக்கவேண்டும். அதனை ஆழ்ந்த கவனத்துடன் படித்துப் பயன் கொள்ள வேண்டும். அதில் சொல்லுகிற நீதிகளையும் நியாயங்களையும் பெரியோரது மேற்கோள்களையும் கவனித்தல் வேண்டும். கவனியாமல் சிலர் பொழுது போக்குக்கென்று புத்தகங்களைக் கையி லெடுத்துக்கொண்டு இங்கும் அங்கும் புரட்டித் தாள்களைத் தள்ளி விட்டுப் படித்ததாகத் திருப்தியடைவதுண்டு. அது நுனிப்புல் மேயும் மாட்டின் செய்கையாகுமே யன்றிப் பயன்தராது. நாவல் படிப்பவர்களில் பெரும்பான்மையர் இப்படியே படிக்கின்றனர். இதனுல் விருத்தியாம்சம் ஏற்படா தென்பதை உணர்கிருர்களில்லை. பொழுதெல்லாம் புலிக்கட்டா ளுடுகிறவர்கட்குப் பயனேதேனும் கிட்டுமா? அதுபோலாகுமிது!

அன்பர்களே! ஊக்கத்தோடு படியுங்கள். படித்தவைகளைப் போற்றுங்கள். அப்படிப் போற்றியவைகளைச் சமயம் வந்தபோதெல்லாம் சிந்திப்பதுடன் பிறருக்குச் சொல்லி அவர்களையும் உங்கள் வழிக்குக் கொண்டுவர முயலுங்கள். தெரியாதவைகளைத் தெரிந்தவர்களிடம் போய்க் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அதற்கு வெட்கப்படாதீர்கள். ஒரு வித்வானை அவன் மகன் "அப்பா! நீ எப்படி ஊரெல்லாம் புகழும் படியான படிப்பைப் படித்தாய்" என்று கேட்டானும். அவ் வித்துவான், "நான் படிக்கும் காலத்தில் மட்டுமன்று, இப்பொழுதும் எனக்குத் தெரியாதவைகளைத் தெரிந்தவர்களிடம் போய்ச் சிறிதும் வெட்கப் படாமல் கேட்டுத் தெரிந்து கொண்டு வருகிறேன். இதனுலேதான்!" என்ருராம்—ஆகையால் தெரியாதவைகளைப் பிறரிடம் கேட்க வெட்கப் படாதீர்கள். படிப்பில் வெட்கப்படுகிறவர் முன்னுக்கு வருவது கஷ்டம். படிப்புக்குக் காலம், **இளமையிற் கல்** என்று ஔவைப் பிராட்டியார் சொல்லியபடி, இளம்பருவமே சிறந்த தாதலின் இதைச் சோம்பலிலும் விளையாட்டிலும் கழித்து விடுவீர்களேயானுல் பிறகு இப்படிப்பட்ட அருமையான காலத்தை நீங்கள் எதிர்பார்க்க முடியாது. இந்தக் காலத்தில் உங்களுடைய மனம் கவலையின்றி யிருக்கக் கூடியது. **வித்தைக்குச் சத்ரு விசனம் தரித்திரம்** என்பது போல் படிப்புக்குக் கவலையும் தரித்திரமும் பகையாதலின் கவலைப்பட்ட மனத்திற்குப் படிப்பு நில்லாது. பெரியவர்களான பிறகு உலக விஷயத்தில் பல கவலை யுண்டாம். ஆதலின் இளமையே படிப்புக்குச் சிறந்தகாலம்; காலமோ உயிரின்பகுதியாகும். **காலமே கருந்தனம்** என்பதுண்டு. சென்ற

காலம் மீண்டும் வாரது. ஆகையால் படிப்பிலே முன்னுக்குவர இப்பொழுதே முயலுங்கள்! முயலுங்கள்! ஓயாமல் முயலுங்கள்! **ஓதுவ தொழியேல்** என்பது ஔவைப் பிராட்டியாகிய ஞானசிரியர் கட்டளை யல்லவா?

சோம்பலையும் துயிலையும் தூர நிறுத்தி வையுங்கள். குருவின் உபதேசவழியில் நில்லுங்கள். நீங்கள் மேன்மை பெறுவீர்கள். அதிர்ஷ்டம் போல் நடக்கிற தென்கிற அவலப் பேச்சுக்குச் செவி கொடாதீர்கள். **முயற்சி திருவினை யாக்கும், முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்** என்னும் அமுதமொழிகளைக் கவனியுங்கள். உழைத்தாலன்றி ஊதியமில்லை என்பது சத்திய மன்றோ?

கல்லாத கயவரைப் பற்றிப் பெரியமகானாகிய திருமூலர் என்பவர் கூறி யுள்ளதைக் கவனியுங்கள்.

கல்லாத மூடரைக் காணவு மாகாது
கல்லாத மூடர்சொற் கேட்கவு மாகாது
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லாராம்
கல்லாத மூடர் கருத்தறி யாரே. (திருமந்திரம்.)

**வரகவி-திரு. அ. சுப்ரமண்ணிய பாரதி,**
சென்னை.

---

## நித்தியவிதி—அறம்

(228-ம் பக்கத் தொடர்ச்சி.)

பெரியோர்களாலனுட்டிக்கப்படும் நன்னெறியில் நடந்து வேதம்விதித்த கர்மங்களைச் செய்து வருவதினால் ஆத்மாவினிடத்திலுண்டாகும் அதிசயமான குணமே தர்மமாம். இது சொர்க்காதி புவனபோகப் பிராப்திக்கு நேரே காரணமாய்நின்று பலனுண்டாகும் வரையில் ஆத்மாவிலடங்கி நிற்குமென்று ஸ்மிருதிகளும் புராணங்களும் கூறுகின்றன. இக் குணத்தையே புண்ணியமென்பர். வேதவிதிகளுக்கும் பெரியோர் அனுஷ்டானங்களுக்கும் மாறாகச் செய்யப்படுங் கன்மங்கள் நிஷித்தகன்மங்கள் (இகழத்தக்க கன்மங்கள்) எனப்படும். அக்கன்மங்களா லான்மாவினிடத்திலுண்டாகும் குணமே அதர்மம் எனப்படும். இது நரகாதி துன்பங்களுக்குக் காரணமாய் ஆன்மாவி லடங்கி நின்று தன் பலனைக்கொடுத்தபின் தொலையும். இதனையே பாபகன்ம மென்பர். இங்ஙனங் கூறியவதனால் ஸ்தூல சரீரத்தினாற் செய்யப்படுங் கன்மங்களினால் ஸ்தூல சரீரத்தின் கருவி கரணாதிகள் ஒருவகையான விகாரப்பாட்டை யடையும். அக்கன்மம் பலகாற் செய்யப்படுமாயின் அவ்விகாரப்பாடே ஒரு விதமாய் மாறிச் சரீரகுணமாய்விடும். அந்தக்குணம் சரீரத்தில்பரிபாகப்பட்டு நரம்பு எலும்பு முதலியவற்றையும் பற்றி நின்று முதிர்ச்சியடைந்தபின் சூட்சும சரீரத்தில் வியாபித்து விடும். அங்ஙனம் வியாபித்த அதுவே மறுபிறப்புக்கு வித்தாய்விடும். அது புண்ணியகன்ம குணமாயின் திவ்ய சரீரத்தையும் அப்புண்ணிய மொழிந்தபின் கன்ம சேஷத்தால் மானிடப் பிறவியையும்

பெற்று, செல்வ சம்பத்துடன் வாழ்ந்து, மேலும் மேலும் தர்மத்தைச் செய்து அநந்தமான போகங்களை நுகர்ந்து, பின் போகத்தில் இச்சையொழிந்திருக்கச் செய்யும். அவ்வொழிவே ஞானத்திற்குக் காரணமாய்ப் பேரின்ப மோட்சத்தை யளிக்கும். பாபகன்ம மாயின் மேற்கூறிப் போந்தவற்றுக்கு முற்றும் மாறானவற்றை யனுபவித்து மீண்டும் மீண்டும் பிறந்திறந்துழலா நிற்கச் செய்யும். ஆதலாலறத்தையே செய்யவேண்டு மென்று நூல்கள் கூறுகின்றன.

தொழிலாகிய கன்மம் குணமாகிச் சரீரத்தைப்பற்றி நிற்ப தெங்ஙனம்? தொழில்களெல்லாம் நிகழ்ந்த வப்பொழுதிலேயே மாய்வது பிரத்தியட்சமாதலா லெனின், அத்தொழில்க ளழிந்தாலும் அவற்றாலாயபயன் நெடுங்காலம் சரீரத்தைப்பற்றி நிற்பது பிரத்தியட்சம். சிலம்பம் முதலிய தொழில்களாலாகிய பயனும், காலை மாலைகளில் உலவுதலா லாகிய பயனும், அத்தொழில்க ளிறந்த பின்பும் நெடுங்காலம் சரீரத்திற் காணப்படுவது பிரத்தியட்ச அனுபவம். மனோ முயற்சியினாலாகும் பயன்களும் பிரத்தியட்சமாக வுணரக் கிடப்பன காண்க. இது பற்றியே வடிவு நிறம் சுவையாகிய குணங்களைப் போலத் தொழிலும் ஓர்வகைக் குணமேயாமென்றும், அதனைத் தொழிற் பண்பென்றும் இலக்கண நூல்கள் கூறுகின்றன. ஏனெனின், சரீரம், அதனுடைய கரசரணாதி அவயவங்கள் இவற்றின் அசைவாகிய குணமே தொழிலெனப்படுவதன்றி வேறின்மையால் தொழிலையுங் குணமென்றே கொள்வர் சான்றோரென்க. ஆதலால் நற்செயல் துர்ச்செயல்களால் சரீரத்தில் வேறுபாடு உண்டாவது கூடும். நற்செயலுடையார் மாட்டுத் தெய்வபக்தி, சத்தியம், பொறுமை, இரக்கம் முதலியவும், துர்ச்செயலுடையார் மாட்டு அவற்றிற்கு மாறான குணங்களும் காணப்படுகின்றன. இதனால் எத்தொழிலில் எவர் அதிகமாய்ப் பழகுகின்றார்களோ அவர்களுக்கு அத்தொழிற் குரிய குணங்களே யுண்டாமென்பது பிரத்தியட்சமாம். இதனால் செய்கைகளாலும் குண விசேஷங்களுண்டா மென்க.

அங்ஙனமாயினும் ஸ்தூல சரீரத்தாற் செய்யப்படுங் கன்மம் சூட்சும சரீரத்தை யடைந்து நிற்பது யாங்ஙன மெனின், ஸ்தூல பூதங்களுக்குக் காரணமாகிய சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தாதிகளைந்தும் நல்வினை தீவினையாகிய வாசனைகளிரண்டும், மனமொன்று மாகிய எட்டுக் கருவிகளாலாகிய சரீரமே சூட்சுமசரீர மென்னப்படும். இதனாலேயே இதற்குப் புரியட்டகாயம் என்று பெயர் வந்தது. இதற்கு இலிங்க சரீரமென்றும் பெயர். இவ்வெட்டினையும் பதினாறாகவும் அதற்குமேலும் விரித்துக்கூறும் நூல்களுமுள வாயினும், அவைகளெல்லா மிவ்வெட்டினுளடங்கும். இச்சூட்சும சரீரத்தின் காரியமே ஸ்தூலசரீரமாம். ஸ்தூலசரீரம் ஊனக்கண்களாற் காணப்படும். சூட்சும சரீரம் எவ்விதக் கருவிகளாலு மறியப்படாதது. இச்சரீரமே அங்குஷ்ட மாத்திரமாய் இதயஸ்தானத்தில் நிற்குமென்பர். ஆதலால் ஸ்தூலகாயத்தின் செயற்குணம் அதன் காரணமாகிய சூட்சுமத்திற் சென்று சேர்ந்தொடுங்குவது இயல்பேயாம். இப் புரியட்டகத்துள் இருவினை வாசனைகள் கலந்திருப்பதினாலேயே பரிபாகப்பட்ட வாசனைக்குத் தக்கவாறு அது திவ்யசரீர மாகவும் மாறு மென்க. இதனைச் சொர்க்க நரகங்களைப் பற்றி விவரிக்கும்போது விரிப்பாம். இது பற்றியே பாபகன்

மங்களுக்குப் பிராயச்சித்தம் விதிக்கும்போது இது எலும்பைப்பற்றிய பாபத்தைப் போக்கும், இது நரம்பைப்பற்றிய பாபத்தைப் போக்கும், இது தோலைப் பற்றிய பாபத்தைப் போக்கு மென்று ஸ்மிருதிகளில் கூறப்பட்டிருக்கின்றன. புண்ணிய கன்மமு மிவ்வாறே தோல் நரம்பு எலும்புகளைப்பற்றி நின்று முதிர்ச்சியடைந்தபின் சூட்சும சரீரத்தைச் சாரு மென்று கொள்க. சாருமாயின் அது பாப புண்ணியங்களாற் கட்டுண்டு நரக சொர்க்காதிகளையடையு மென்பது விளங்கும். இங்ஙனம் கட்டுப்படுதலையே பந்தம் என்று நூல்கள் கூறும்; இப்பந்தமே விதியுமாம். அதனால் அடையப்படு மின்பதுன்பங்களே அச்சரீரத்தாலடையப்படும் பயன்களா மென்க. மனசாலும் வாக்காலும் காயத்தாலும் கன்மங்கள் செய்யப்படும். மனதால் மட்டும் செய்யப்படும் கன்மங்களுமுண்டு. வாக்காலும் காயத்தாலுஞ் செய்யப்படும் கன்மங்கள் மனசம்பந்த மின்றிச் செய்யப்படுவனவன்றாம். இக்கன்மங்கள் புண்ணிய கன்மங்களாயின் முற்கூறியவாறே சத்துவகுண சம்பந்தமாய் ஒரு வகையாய்ப் பரிணமித்து உதிரத்தோடு கலந்து பரிபாக முதிர்ச்சியினால் மாம்சம் தோல் நரம்பு எலும்புகளைப்பற்றி நின்று சரீரத்தைப் புண்ணிய சரீரமாகச் செய்து கருவிகரணங்களை ஒளிமயமாகச் செய்யும். அதனால் அந்தக் கரணங்கள் சுத்தப்பட்டு உள்ளே மறைந்து வசிக்கும் பரப்பிரம்ம சொரூபத்தை யுணரச் சக்தி யுள்ளன வாகும். பாபகர்ம மாயின் தமோகுண சம்பந்தமாய்த் தோன்றிப் பரிபாகப்பட்டு அந்தக்கரணாதிகளை யிருண்மயமாக்கிப் பலவகையான தீமைகளுக்குக் காரணமாகச் செய்யும். இவ்வகையாய்த் தோன்றும் பாபபுண்ணிய கன்மங்கள் தத்தம்பயனைக் கொடுத்த பின்னரே யொழியும். புண்ணியம் இன்பத்தையும், பாபம் துன்பத்தையும் பயக்கும். ஆதலால் மனித ஜன்ம மெடுத்தவர்கள் திரி கரணங்களினாலும் புண்ணிய கன்மங்களையே புரிதல்வேண்டும். பாபகன்மத்தை ஒழித்துப் புண்ணியங்களையே செய்துவரின் காலாந்தரங்களில் முன் செய்துள்ள பாபகன்மங்களின் வலி குன்றும். குன்றவே புண்ணியம் மிகும். அது மிகுதலால் சித்த சுத்தியுண்டாகும். சித்த சுத்தியுண்டான பொழுது இயற்கையான மெய்ஞ்ஞானம் பிரகாசிக்கும். இதனைக் “கருமத்தான் ஞான முண்டாங் கருமத்தைச் சித்த சுத்தி தரும்” என்ற முன்னோருரையா லுணரலாம். ஞானம் பிரகாசித்தால் அதில் பரப்பிரம்ம சொரூப தரிசனையாம். அதுவே மோட்ச மெனப்படுவதாம். இதன் பொருட்டே நித்திய விதியிற் கூறிப்போந்த ஸ்நான ஜப தபாதிகள் விதிக்கப்பட்டன. இவைகளே அறம் என்ற பொதுப் பெயராற் கூறப்படும்.

இவ்வறம் இல்லறம் துறவற மென இருவகைப்படும். அவற்றுள் துறவற மென்பது உலக ஆசைகளைப்பற்றற முற்றுந் துறந்து சதா நிஷ்டையி லிருப்பதாம். இதுவே ஸந்நியாச மெனப்படும். இவ்வறம் பூர்வ ஜன்மங்களில் செய்துள்ள அனந்த புண்ணியங்களை யுடைய மஹாத்மாக்களுக்கே யன்றி யேனையருக்குச் சித்திப்பதரிது. ஆதலால் எல்லோரானு மநுஷ்டிக்கப்படும் தர்மம் இல்லற தருமமேயாம். இல்லறம் இயற்றுதற்கு எளியதாயும், மோட்சத்தைத் தருவதாயும், துறவறம் மோட்ச மளிப்பதாயினும் கஷ்ட சாத்தியமாயு மிருப்பதால், இல்லறத்தையே நூல்கள் புகழ்ந்தன. “இல்லற மல்லது நல்லற மன்று” என்று அன்னையார் இல்லறத்தைப் புகழ்ந்து கூறினார். திருவள்ளுவநாயனாரும் “அறத்தாற்றி னில்வா

ழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்—போஒய்ப் பெறுவ தெவன்'' என்று இல்ல
றத்தையே புகழ்ந்து கூறினார். அன்றியும் "அறனெனப் பட்டதே யில்வா
ழ்க்கை யஃதும்—பிறன்பழிப்ப தில்லாயி னன்று'' என்றதனால், துறவற
மியற்றுதல் அதிக கடினமான தென்றும், கஷ்டத்துடனனுஷ்டித்தாலும்,
பிறராலிகழப்படும் அபவாதங்களுக்கிட முடையதா மென்றும், அபவாத
மின்றி யுல்கத்தாராற் புகழப்படுமாறு நெறிபிறழா தொழுகினாலன்றி அது
பயன்றருவதில்லை யென்றும் கூறி, அவ்விதமான கஷ்டங்களின்றி உலக
வின்பங்களை யெல்லா மனுபவித்துக் கொண்டே யியற்றப்படு மில்லற
தருமமே சிறப்புடைய தென்றும் விளக்கி யருளினார். அபவாதமாவது
மீண்டும் உலக இன்பத்தில் இச்சையைச் செலுத்துவதால் நேரிடும் தூஷண
மாம். இதனால் மோட்ச மார்க்கம், துறவற நெறி இல்லற நெறி யென
இருவகைப்படு மென்பதும், அவற்றுள் துறவறம் மேலைத்தவ முடையார்க்
கன்றி யியற்றுதற்காகா தென்றும், இல்லறநெறியே எல்லாரும் செல்லத்த
க்க நெறியெனவும் விளங்கும். இவ் வில்லறநெறி யொழுகுவார்க்கே நித்
தியவிதியிற் கூறப்பட்டவை பெரும்பயன் விளைக்கும். அன்றியும் பிரம
சரிய நெறிதவறா தொழுகு வோர்க்கும், நைஷ்டிகப் பிரமச் சாரிகளுக்கும்,
ஸ்நாதகர்களுக்கும் பயனளிக்கும். தன் ஆயுள் வரைக்கும் குருகுலவாசம்
செய்து குரு பணிவிடைகளை நிறைவேற்றி அவர் சந்நிதானத்தில் நிஷ்டை
கூடியிருப்பவன் நைஷ்டிகப் பிரமச்சாரி யெனப்படுவான்; குருவுக்குத் தட்
சணை கொடுத்து அவர் அனுமதியினால்கிருகஸ்தர்களைப்போலச் சந்தன
புஷ்பாதிகளை யணிந்துகொண்டு விவாக மின்றி எப்போதும் ஆநந்தமாய்க்
காலங் கழித்துக்கொண் டிருப்பவன் ஸ்நாதக னெனப்படுவான். இவர்கள்
எல்லோருக்கும் ஆதாவாய்ப் பத்தினியுடன் கூடி நித்தியவிதியிற் கூறிய
தருமங்களை நெறிதவறாமல் செய்பவனே இல்லறத்தான் எனப்படுவான்.
இதனைத், "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லொன்றாங்—கைம்
புலத்தா றோம்ப றலை'' என்று தேவர் விளக்கி யிருத்தலாலுணர்ந்து
கொள்ளலாம். செய்வதற் கெளிதா யிருத்தலானும், நாயகன் நாயகி யிரு
வராலும் மனமொத்துச் செய்யப்படுவதாலும், பிரமச்சாரி, வானப்பிரஸ்
தன், சந்நியாசி, அதிதி இவர்களுடைய தருமங்கள் கெடாமற் பாதுகாக்கு
மியல்புடைமையானு மில்லறம் சிறப்புடையதா மென்று அறியலாகும்.

(தொடரும்.)

**சிவானந்தசாகர யோகீசுவரர்.**

---

## ஆரம்பக்கல்வியும் சர்க்கார் சபை மெம்பர்களும்.

நம "தானந்தபோதினி'' கோரும், நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு
ஆரம்பக்கல்வி அத்தியாவசியமாதலாலும், துரைத்தனச்சபை மெம்பர்களும்
காரணர்களா யிருத்தலாலும், எத்தனையோ மெம்பர்கள் நமதானந்தனை
எற்று, அவன் கூறும் நல்விஷயங்களை அனுஷ்டித்து வருவார்களாதலா
லும், அவர்கள் முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய விஷயங்களை, நமதா
னந்தன் மூலமாக அறிவித்து, நமதானந்தன் நோக்கமாகிய நாட்டின் முன்
னேற்றத்தினையடைய விரும்பிப் பின்வரும்விஷயத்தினை எழுதுகிறேன்:-

இப்பஞ்ச காலத்தில் இருவருக்கே போதாத, முறையே 8,-10,-11. ரூபாய்கள் பெறும் ஏழை எலிமெண்டரி உபாத்தியாயர்களின் நிலைமையை விவரித்தல் அனுவசியம். அது யாவருக்குந் தெரிந்ததே. சாத்தியமுமன்று. விஷய விவரம் யாதெனில், திருச்சினுப்பள்ளி ஜில்லா போர்டின் 2-8-19 மீட்டிங்கில் ஒவ்வொரு உபாத்தியாயரும் ரூ. 12 பெறுகிறார்களென, கனம் திருச்சி ஜில்லா அஸிஸ்டென்டு இன்ஸ்பெக்டர் அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். இது விஷயத்தில் கால நிலைமையை உணர்ந்து முசிரி தாலுகா போர்டார் ரூ. 12 ஒவ்வொரு உபாத்தியார்களுக்கும் கொடுத்து வருகிறார்கள். இதுவும் இக்காலத்துக்கு மிகச் சொற்பமே யெனினும், திருச்சி தாலுகா போர்டார், இந்த 12-ரூ. முன்பே கொடுக்கப்பட்டு வருவதாக ஜில்லா போர்டில் பிரஸ்தாபமாகி 4-மாதங்களுக்கு மேலாகியும், இன்னும் கொடுக்கப்படாமல் இருப்பதிலிருந்து, இது உண்மையோ பொய்யோ வென எண்ணவேண்டி வருகிறது.

வார் அலவன்ஸு என்னும் பஞ்சப்படியோ அஞ்சும்படியா யிருக்கிறது. முனிசிபாலிட்டியில் இவ்வுபாத்திமார்களுக்கே 3-4 ரூ. படிகொடுக்கிறார்கள். ஜில்லா போர்டில் 2. ரூ. கொடுக்க உத்தரவாகி யிருக்க, தாலுகா போர்டிலோ ஒரு ரூபாய் கொடுக்கிறார்கள். இக் காலத்தில் அதிக விலை கொடுத்தேனும் முனிசிபாலிட்டி—நகரங்களில் சாமான்கள் தவறாது வாங்கலாம். கிராமங்களிலோ நகரத்து விலையைவிட அதிகமாகக் கொடுப்பினும் கிடைப்பது அரிதாயிருக்கிறது. ஆகவே, கிராமத்தினர்க்குத்தான் அதிகக் கஷ்டமென்பது உணரத் தக்கது.

இதிலும், அதிகச் சம்பளம் பெறுவோர் சொற்ப கஷ்டமும், சொற்ப சம்பளம்பெறுவோர் அதிகக்கஷ்டமும் அடைவாதலால் சொற்பச்சம்பளம் பெறுவோர்க்கு அதிகப்படியும், அதிகச்சம்பளம் பெறுவோர்க்கு சொற்பப் படியும் கொடுப்பதுவே நியாயமாகும். அவ்விதமின்றி, ஏறுமாறாக இருப்பின், அவரவர்களே உணர்ந்து கொள்ள வேண்டியதுதான்.

அதிலும், எல்லா இலாகாக்களுக்கும் அடிப்படையான இவ் வாரம்பக்கல்வி ஆசிரியர்கள் இவ்விதமாயின் மேற்படை எவ்விதம் நன்றாயிருக்கும்?—என்பதையும், அடிப்படையே பலமாயிருக்க வேண்டு மெனவும் உணர்ந்து அதற்குத் தக்கபடி நடத்த வேண்டியது நியாயமும், நாட்டின் முன்னேற்றத்திற்கு அவசியமும் ஆகு மெனலாம். ஆயினும், 'காலத்திற் கேற்ற கோலம்' என்பதற் கேற்க, அடிப்படையே மிக்க கேவலமாயும் மேற்படையே மிக்க பலமாயு மிருப்பதையும்—உபாத்திமார்களை விட சேவகர்களே மிக்க அதிகச் சம்பளமும் படியும் பெறுகிறார்களென்பதையும் நோக்க, அடிப்படையே இலேசாயும், மேற்படை மிக்க கனமாயும் அமைப்பதால் விளையும் பலனை, ஆட்சி புரிவோர் முதல் அதனை ஆதரிப்போர் வரையுள்ளவர்கள் அறியாதிருக்கலாகுமோ. இதற்குத் தூண்டுகோல்களாக விருக்கும்—இருக்கமுன் வரும்—மெம்பர்கள், இவைகளைக் கவனிக்கின்றார்களில்லை போலும்! இதிலிருந்து, ஏழை எலிமெண்டரி உபாத்திமார்களின் விஷயங்களைக் கவனிப்பதற்காக, தற்போது 'வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம்' கேட்கப்படுவதுபோல், உத்தியோக இலாகாக்களின்—"எலிமெண்டரி உபாத்திமார்களின்" பிரதி நிதித்துவமும் கேட்க வேண்டும் போலும்!

என்னே! மெம்பர்களென்பவர் எல்லோருடைய விஷயங்களேயும் கவனிக்கவேண்டியவர்ளா யிருந்தும், 'எங்களைப்பற்றி கவனிப்பாரில்லை ஆதலால் எங்களுக்கொரு பிரதிநிதி இருக்க வேண்டும்—ஏற்படுத்த வேண்டும்—கொடுக்க வேண்டும்—கொடுக்க வேண்டும் என்று வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் கேட்கப்படுமோ? இதிலிருந்து, பொதுவாக எல்லோருடைய நலத்திற்கு மென ஏற்படும் மெம்பர்கள், எல்லோருடைய நலத்தினையும் கவனிப்பதில்லை யென ஏற்படுகின்றதல்லவா?

கனம் மெம்பர்களே! உங்கள் பால் ஏற்படும் இத்தகைய அபவாதம் ஏற்படாதவாறு இனியேனும் நடந்து கொள்ளுமாறு—எல்லோருடைய நன்மைகளேயும் கவனிக்குமாறு—உலக முன்னேற்றத்திற்கு அடிப்படையான, ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் விஷயங்களேயும் கவனிக்குமாறு வேண்டிக் கொள்ளுகிறேன்.

இவ்வாரம்பக் கல்வி சம்பந்தமாய் இவர்கள் கவனிக்க வேண்டியவைகளும், எனது சிற்றறிவிற் கெட்டக்கூடியவைகளுமான, எனது மிகச் சொற்ப—சிறிய யோசனைகளை வெளிக் கொண்டு வந்து அறிவிக்க நமது **ஆனந்தன்** இடங்கொடுக்குமாயின் எழுதிக்கொண்டுவர உத்தேசிக்கிறேன்.

கோபத்தை அடக்க வேண்டும் என்பதற்கு, 'ஆறுவது சினம்' என்ற நமது தமிழணங்காம் ஔவைப்பிராட்டியாரின் அரும்பெரும் அமுதவாக்கை, இதனைக் கண்ணுறும் கனவான்கள் சிந்தித்தல் வேண்டும். ஏழை எலிமெண்டரி உபாத்தியாயர்கள் படும் பகரொணுப் பசியே இவ்விதம் பகர நோந்தது எனினும், இது தூஷணையன் றெனவும் பூஷணையாம் வேண்டுகோளெனவும் உய்த்துணர வேண்டும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

P. பரிமளப் பல்லவராயர்.

---

**குறிப்பு:**— இதைப்பற்றி மற்றொருபக்கத்தில் நாம் கூறியிருப்பதைக் கவனிக்கக் கோருகிறோம்.

பத்திரிகாசிரியர்.

## கைவல்ய நவநீத வசனம்

(214-ம் பக்கத்தொடர்ச்சி)

**சீடன்:**—"கிடைத்தற்கரிய பரமாசாரியரே! ஆன்மாவிற்கும் பரமான்மாவிற்குமுள்ள சம்பந்தத்தை யுணரவொட்டாது மறைத்துக்கெடுத்து, பஞ்சகோசங்களாகவும், பஞ்சபூதங்களாலாகியதேகமுதல்புவனபோகங்களாகவும் தோன்றியது விட்சேபசத்தியாக இருக்க, தாங்கள் ஆவரணசத்தியே உயிர்களின் ஞானக்கண் குருடாகும் வண்ணம் மறைத்துப் பாழாக்கியதென்றும், பிறப்பிறப்பாகிய இப்பெருந்துன்பத்தை யுண்டாக்கிய உபாதியென்றும் அருளியதென்னவோ? அதை அடியேற்கு விளக்கியருளப் பிரார்த்திக்கின்றேன்" என்றனன்.

ஆசான் பின் வருமாறு அதற்குச் சமாதானம் கூறுகின்றார்:—

மைந்தனே! நான் கூறுவதைக் கவனமாய்க் கேட்டறிதி. அவிவேகத்தால் அஞ்ஞானத்தினின்று தம்மைவிடுவித்துக்கொள்ள முயற்சிசெய்யாது "நான் - எனது" என்ற அபிமான முடையராய்ப் பாப புண்ணிய கருமங்களைச் செய்வோர்க்குப் பிறப்பிறப்பை யுண்டாக்குவதில் விக்ஷேப சத்தியும் காரணமாயிருக்கிறதுண்மையே. ஆயினும் முயற்சி யெடுத்துக் கொண்டு மோட்ச மடையப் பிரயத்தனப் படுவோர்க்கு இந்த விக்ஷேப சத்தியே உதவியா யிருக்கிற தென்பதைக் கவனித்துப் பார்.

[எங்ஙன மெனின் விக்ஷேபசத்தியி னிடமாக உண்டான சூக்கும பஞ்ச பூதங்களின் சத்துவகுண சமஷ்டியில் அந்தக் கரணமும், வியஷ்டியில் ஞானேந்திரியங்களும் உற்பத்தியாயின. இந்த ஞானேந்திரியங்கள் ஈசுவரனுடைய சொரூபத்தைக் கண்டு தரிசிக்கவும், அவனைத் தோத்திரம் செய்யவும், அவன் புகழ்களைக் கேட்கவும், இன்னும் பலவித சத் விஷயங்களுக்கும் உபயோகமாகின்றன. அந்தக் கரணமாகிய மனம் மாயையே யாயினும், அம்மனத்தின் சத்துவகுணமே ஞானத்தை யடையக் கடைசிவரையில் உதவியாயிருந்து முடிவில் அந்த ஞானத் தீயால் தானும் அழிந்து போய் விடுகிறது.]

இதுவுமன்றி நித்தியப்பிரளயமாகிய சுழுத்தியிலும், மகாப் பிரளயத்திலும் விக்ஷேப சத்தியின் காரியங்களாகிய சகங்களனைத்தும் நசித்தும், (ஆன்மாக்களனைத்தும், தங்கரேணுக்கள் மெழுகுருண்டையில் சிக்கி மறைந்து கிடப்பது போல், மாயாந்தகாரத்தில் சிக்கியிருந்து, பிறகு சிருட்டியில் தம் தம் பூர்வவாசனைப்படி சனிக்கின்றனவே யன்றி) ஒருவரேனும் மோக்ஷமடைந்த துண்டோ. விக்ஷேபம் மோக்ஷத்திற்கு விரோதியாயின், அது நசித்த மாத்திரத்தால் ஆன்மா மோக்ஷமடையவேண்டுமன்றோ. அவ்வாறில்லையே. அதற்குமாறாக ஆவரண சத்தியே ஆன்மா மோக்ஷமடைய வொட்டாமல் கெடுக்கும் விரோதியாதலின், ஆவரணத்தை நீக்கிக் கொண்ட ஆன்மா மோக்ஷ மடைகிறது. [ஆன்றோர்கள் மானிட தேகமே முத்தியடைவதற்கு அநுகூலமான தென்றும், இதை யடைதலே யரிதாகையால் இப்போதே மோக்ஷமடைய முயலவேண்டுமென்றும், இது போய் விட்டால் பிறகு எச்சன்மம் வாய்க்குமோவென்றும் பிரலாபித்திருப்பதே யிதற்குப் போதிய சான்றாகும். மனோவாக்குகளுக் ககோசரமாய், அண்டராண்ட சரா சரங்கள் எங்கணும் நீக்கமின்றி நிறைந்து நிற்கும் அகண்ட பரிபூரண சச்சிதானந்த மயமாகிய பரம் பொருளை, ஊக்கத்தோடு உற்று உணர்வதற்கு இத் தேகம் இடமாயிருத்தலின், இதுவும் குருவுக்குச் சமதையானதே யென்று கூறப்பட்டிருக்கிறது.

"வாக்கி னைக்கடந் தோங்கிமற் றெங்கணும்
நீக்க மின்றி நிறைந்த அறிவினை
யூக்க முற்றுணர் தற்கிட னுதவி
னுக்கை யுங்குரு வாய தரசனே"

என்று பாகவதத்தில் சுகப்பிரம்ம ரிஷி பரீட்சித்து மகா ராஜனுக்கு அருளியிருக்கிறார்.]

**சீடன்:—**"ஞாநாசிரியரே! இச்சந்தர்ப்பத்தில் சிறியேன்மனதில் ஒரு ஐயம் தோன்றியுளது. தங்களது ஞானப்பிரகாசம் அதை யொழித்தருள

வேண்டுமாய்ப் பிரார்த்திக்கின்றேன். அந்த ஐயமாவது;—"இந்த விக்ஷேபசத்தி மூலப் பிரகிருதியின் தமோ குணத்தில் உற்பத்தி யானது. மூலப் பிரகிருதி கிளிஞ்சிலில் வெள்ளி தோன்றுவது போலும், கயிற்றில் அரவுதோன்றுவது போலவும் ஆரோபத்தால் தோன்றியது. இவ்வாறு தோன்றிய சத்தி பொய்யே யாதலால், இத்தகைய விட்சேப சத்தியிலுண்டான (குருவின் உபதேசம், சாத்திர விசாரணை, சத்துவ குணமனம் முதலிய சாதனங்களால் கிடைக்கும்)மோட்சமும் பொய்யாகவே யிருக்குமோ வென்பதே" என்றனன்.

ஆசாரியர் "மைந்தனே! நீ கூறியது சாதாரணமாய் உதிக்கத்தக்க ஐயமே. ஆயினும் அனுபவமான திருட்டாந்தங்களா ல் அதை நிவர்த்தி செய்து கொள்ளலாகும். எவ்வாறெனின் கூறுதும். ஒருவன் நித்திரையில் கனவு காண்கிறான். அவன் அக் கனவில் ஓர் தோட்டத்தின் வழியே சென்றுகொண் டிருக்கையில் தீடீலென்று சமீபத்திலுள்ள புதரி லிருந்து ஒரு சிங்கம் தன் மேல் பாய்ந்து வருவதைக் கண்டதே கோவென்றலறி உடனே விழித்துக் கொள்கிறான். அவன் கண்ட கனவென்னமோ பொய் என்பது தெரிந்த விஷயம். அக் கனவில் தோன்றிய சிங்கமும் பொய்யே. ஆயினும் அப் பொய்யாகிய சிங்கத்தால் அம் மனிதனுக்குண்டான அலறலும், நித்திரையினின்று விழிப்பும் நிச்சயமல்லவோ. அது போலவே விக்ஷேபசத்தி ஆரோபிதமாகிய மித்தையாயினும்,அதனாலுண்டாகும் மோக்ஷம் சத்தியமே யாகும்.

இதற்கு இன்னொரு திருட்டாந்தம் கூறுகிறோம். உலகில் விஷத்தை அதற்கு விரோதியாகிய வேறொரு விஷத்தால் அழித்து விடுகிறார்கள். இரும்பை எஃகாகிய இரும்பினால் அழிக்கிறார்கள். அம்பினை வேறொரு அம்பினால் வென்று விடுகிறார்கள். ஆடையிலிருக்கும் அழுக்கினை உவர் மண்ணாகிய அழுக்கினால் போக்குகிறார்கள். அது போலவே நிலையில்லாத அவித்தை யாகிய மாயையை, (சத்துவ குண) மாயையாலேயே அழித்து விடுகிறார்கள். பிறகு சவத்தைச் சுடும் தடியானது தீயைக் கிளறிக்கிளறி சவத்தைச் சுடும்போது தானும் கொஞ்சகொஞ்சமாய் எரிந்து கொண்டே போய், சுட்டு முடிந்ததே மிச்சமாய் நிற்கும் சிறுதுண்டுத் தடியும் அந்த அக்னியிலேயே யெறியப்பட்டு சாம்பலாயழிவது போல், அசுத்த மாயையை யழித்த சத்துவமாயையும் முடிவில் (முன் கூறப்பட்டபடி) ஞானக்கினியினால் அழிந்துபோம். இதையே,

"கருதி மலத்தான் மலமறுக்குங் காருவென்ன மாயைதனைப்
பெருமா யையினாற் செறல் வேண்டும்."

என்று வாசிட்டம் கூறுகிறது.

[இதை வாசிப்போர் ஒரு விஷயத்தைக் கவனத்தில் வைத்தால் அனேக சந்தேகங்கள் உண்டாவதை யது தடுத்து விடும். அதாவது நமது அனாதி வேதத்தில் கூறப்பட்டிருக்கும் மோக்ஷம் இறந்த பின் என்றைக்கோ ஒரு நாளைக்கு வருமென்று கண்மூடித் தனமாய் நம்பிக்கொண்டு மடியச் சொல்வதல்ல அதற்கு மாறாக ஆன்மா இத்தேகத்தி லிருக்கும்போதே அங்கை நெல்லிபோல் பிரத்தியட்சமாய் அடைந்து அனுபவிக்கத் தக்கது. நமது முன்னோர்களாகிய மகான்க ளனைவரும் அவ்வாறு ஒரு ஐயமுமின்றிப்

பிரத்தி யட்சமாக இவ்வுலகி லிருக்கையிலேயே அதை யடைந்து உறுதியாய்க் கைப்பற்றிக் கொண்டார்கள்.

“ விண்ணவரிந் திரன்முதலோர் நார தாதி
விளங்குசப்த ரிஷிகள்கன வீணை வல்லோர்
எண்ணரிய சித்தர்மநு வாதி வேந்தர்
இருக்காதி மறைமுனிவ ரெல்லா மிந்தக்
கண்ணகன்ஞா லம்மதிக்கத் தானே யுள்ளங்
கையினெல்லிக் கனிபோலக் காட்சி யாகத்
திண்ணியநல் லறிவாலிச் சமயத் தன்றோ
செப்பரிய சித்திமுத்தி சேர்ந்தா ரென்றும்.”

(தாயுமானவர்.)

## ஜீவ ஸப்தாவஸ்தைகள்.

இந்த விக்ஷேபசத்தியால் ஜீவர்களுக்கு ஏழுவித அவஸ்தைகளுண்டு. இவற்றிற்கே ஜீவ ஸப்தாவஸ்தைகள் என்று பெயர் (ஸப்தம்=ஏழு). அந்த ஏழவஸ்தைகளும் எவையெனின்:—

(1) அஞ்ஞானம், (2) ஆவரணம், (3) விக்ஷேபம், (4) பரோக்ஷம், (5) அபரோக்ஷம், (6) துக்க நிவர்த்தி, (7) தடையற்ற ஆனந்தம், என்பவைகளே. இவற்றுள்;—

(1) **அஞ்ஞானம்:**—ஆன்மா தான் நித்தியமாய் சச்சிதானந்த சொரூபமாய் பரப்பிரம்மத்திற்கு அனன்னியமா யிருப்பவன் என்கிறதன் நிஜ சொரூபத்தை மறந்திருப்பதே அஞ்ஞானம்.

(2) **ஆவரணம்:**— நமக்குள் பரமாத்மா வென்று ஒன்று காணப் படவில்லையே. இருந்தால் தோன்றாதா என்பதே ஆவரணம் என்னும் மறைப்பாகும்.

(3) **விக்ஷேபம் :**—தன் நிஜசொரூபத்தை மறந்த ஆன்மா தன்னைத் தேகேந்திரியங்களோடு சம்பந்தப் படுத்திக்கொண்டு, அவற்றின் தொழில்களை யெல்லாம் தன் தொழிலாகக் கொண்டு, அத்தொழில்களாலுண்டாகும் பாபபுண்ணியங்களை யனுபவிக்கப் பிறப்பிறப்பை யடையும் சீவனே தானென்று நினைத்தலே விக்ஷேபமாம்.

(4) **பரோக்ஷஞானம்:**— காரியகுருவாலும் நூல்களிற் கூறியிருப்பதைப் பார்ப்பதாலும், சாக்ஷிமாத்திரமா யிருக்கவேண்டிய பிரத்தியகாத்மாவே தானென்று (வாசாஞானமாய்) உணரல் பரோக்ஷ ஞானமாம்.

(5) **அபரோக்ஷஞானம்:**— ஞானநூல்களையாராய்ச்சி செய்து, காரண குரு (ஞானாசிரியர்) வின் உபதேசம் பெற்றுச், சகல சந்தேகங்களும் நீங்கித் தன் நிஜசொரூபத்தை யறிந்து, பரமான்மாவோடு இரண்டறக்கலந்து தானற்று நிற்கும் அத்துவித நிலையை அனுபவமாயடைதல் அபரோக்ஷ ஞானமாம்.

(6) **துக்கநிவர்த்தி:**—தான் ஜீவனென்றும், கர்த்தாவென்றும் கருதலையும், தனக்கும் பாப புண்ணியங்களும் அதனால் பிறப்பிறப்பும் உண்டென்பதையும், இதனாலடையும் துக்கத்தையும் அடியோடு நீக்கி விடவே துக்க நிவர்த்தியாம்.

7. **தடையற்ற ஆனந்தம்** (அல்லது ஆனந்தப் பிராப்தி):— சகலதுக்கங்களிலு மிருந்து விடுபட்டு, தொழிலற்று சச்சிதானந்த சொரூபமாகிய பிரம்மானந்தக் கடலில் மூழ்கி ஆனந்தமயனாய் ஒன்றும் வேண்டாத பூரண திருப்தி யடைந்திருப்பதே தடையற்ற ஆனந்தமாம்.

(தொடரும்.)

சீடன்.

---

1. கர்த்தா அல்லது கர்த்திருத்வம்=தான் காரியங்களைச் செய்பவன் என்று கருதல்.

2. போக்தா அல்லது போக்திருத்வம்=தான் போகங்களை (சுகதுக்கங்களை) யனுபவிப்பவன் என்று கருதல்.

---

## அனுதாபம்.

"அன்பில்லா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு" ...... குறள்.

என்று முப்பால் தர்மங்களையும் வெளியிட்ட திருவள்ளுவர் அன்பையும், அதனால் உதிக்கும் அனுதாபம், ஜீவகாருண்யம், ஈகை இவையனைத்தையும் விளக்கிக் காட்டினார். இவ் விதமான அன்பும் அனுதாபமும் இல்லாத மனிதர் எவ்விதமான கல்வி, செல்வம், விவேகம் முதலியன உடையவராக இருப்பினும், கடவுளிடத்தில் மிகபக்தி யுடையவராக இருப்பினும், அவர்கள் மிருகங்களினும் கடையராவர். ஏனெனில், சில மிருகங்கள் மனிதர்களுடன் கூடிப் பழகுவதால் தமக்குச் சுபாவமாகவுள்ள கடிக்கும் தொழிலையும், தம்மினத்திற் குரிய ஜீவ ஹிம்சை முதலியவற்றையும் ஒழித்து அன்புடையனவாக இருக்கக் காண்கிறோம். உத்தம மனிதர்களிடத்தில் பழகும் மிருகங்கள் பழக்க வாசனையால் சிறந்த தர்மங்களுள்ளவைகளாயிருந் திருக்கின்றன என்று நாம் அனுபவத்திலும் கண்டிருக்கிறோம். கதைகளிலும் படித்திருக்கிறோம்.

மிருகங்களே இப்படி யாயின் மானிடர்கள் தங்கள் குலத்தை விளக்கும் தர்ம குணங்களை யடைந்திருத்தலன்றோ நலம். இவ்வித குணம் மனிதர்களுக்குச் சுவபாவத்தில் உண்டென்பதும், ஆனால் அது கெட்ட பழக்கங்களினால் நீங்கி விடுகிற தென்றும் தெரிய வருகிறது.

"வெந்நீர் பொருதெனுடல் காவின்முட் டைக்கவும்
வெடுக்கென் றசைத்தெ டுத்தால்
விழியிமைத் தங்ஙனே தண்ணருளை நாடுவேன்
வேறொன்றை யொருவர் கொல்வின்

அந்நேர மையோவென் முகம்வாடி நிற்பதுவும்
ஐயநின் னருளறி யுமே
யானுனு மெத்தப் பயந்தவனி யானென்னை
யாண்டநீ கைவி டாதே
யிந்நேர மென்றிலை யுடற்சுமை யதாகவு
மெடுத்தா விறக்க வென்றே
யெங்கெங்கு மொருதீர்வை யாயமுண் டாயினு
மிறைஞ்சுசுக ராதி யான
தொன்னீர்மை யாளர்க்கு மானிடம் வகுத்தவரு
டுனையென்று நம்புகின் றேன்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபராஞ்
'சோதியே சுகவா ரியே"

என்று தாயுமானவர் கூறியிருக்கிறார். இவ்வித காருண்ய குணம் அமைந்தவரை ஜீவராசிகள் மனமாரத் துதித்து, வாயார வாழ்த்துகின்றன. இதைப்பற்றித் திருவள்ளுவரும்,

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்"

எனக் கூறியிருக்கிறார்.

இந்த அனுதாபம் என்னும் குணத்தைச் செய்கையாலும், வசனங்களினுலும், நோக்கத்தினுலும் பிறர்க்குப்பயன்படும்படி செய்யலாம். அவ்வித குண மில்லாதவன் விலங்கிற்குச் சமானம். உலகத்தில் வாழும் சகல ஜீவ ராசிகளும் இன்பத்தை யடைய நாடுமே யன்றி, துன்பத்தை ஒரு போதும் அடைய நாடா. முற்றுந்துறந்த துறவியும் சிற்றின்பத்தை யொழித்துப் பேரின்பத்தை யடையும் பொருட்டே அனேக அருமையான காரியங்களைச் செய்வது சகஜமாக இருக்கிறது. நாம் ஏதை யடைய விரும்புகிறோமோ அதைப் பிறர்க்கும் செய்ய வேண்டும். பிறர் நம்மிடம் அன்பாக இருக்க வேண்டுமாயின் நாம் முதலில் அவர்களிடம் அன்பாக இருக்க வேண்டும்.

வினைக்கு அஞ்சி உண்மையும் நீதியும் தர்மமு மாகிய அனுதாபத்தையே கடைபிடித்தொழுக வேண்டுமென்றும், கடவுள் ஒருவர் இருப்பாராயின் அவர் நீதியும் உண்மையும் உடையவராக இருப்பாரே யன்றி பாரபட்சம் செய்பவராக இரார் ஆதலின் அவரிடம் நன்மை பெற வேண்டுமாயின் நாம் நற்குண நற் செய்கையுடையவர்களாக இருந்தாலொழிய, அவரைத் துதிக்கும் வினையினுலும், கொடிய செய்கைகளைச் செய்து மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுதல் அல்லது பிராயச் சித்தம் செய்து கொள்ளல் இத்தகையவை களினுலும் நம் குற்றங்கள் மன்னிக்கப்பட்டு நித்யானந்தப் பேற்றை யடையலா மென்னும் வீண் ஆசையை நீக்கி இருத்தலே கெட்ட செய்கைகளை விட்டு நற்கருமங்களைச் செய்வதற்கேது என்றுமுன்னி நடக்கின்ற வர்களே உத்தமர்கள். உதாரணமாக:—

ஒழுங்காக வேலை செய்யும் நற்குணமுள்ள வேலைக்காரன் ஒருவன் தன் எஜமானனுக்கு முகஸ்துதி முதலிய இத வசனங்கள் கூறுன். ஒழுங்கற்ற வேலைக்காரனே தன் எஜமானைக் கண்டதும் பயப்பட்டு வேலைகள்

சரிவரச் செய்பவன் போல் பாசாங்கு செய்து நடிப்பதும், முகஸ்துதி செய்வதும், கைகட்டி உத்தரவுக் காகக் காத்திருப்பதுமாக இருப்பான். அது போல் நன்னடக்கை யில்லாதவர்களே பெரும்பாலும் மன்னிப்புக் கேட்பவர்களாகவும், கடவுளைப் பூசித்து தங்கள் குற்றங்களை மன்னித்து நல் வரமளிக்கக் கேட்கின்றவர்களாகவும் இருக்கிறார்கள்.

ஆதலால் நம்மால் கூடிய வரையில் நல்வினை செய்து நமது அறியாத் தனத்தால் நேரும் குற்றங்களுக்குப் பரிகாரங்கள் செய்வது நலம். நண்பர்களே! இவ்வியாசத்திற் கண்டபடி அனுதாபம் என்னும் அன்பை நாம் ஒவ்வொருவரும் மேன் மேலும் விருத்திசெய்து அதனால் பிறர்க்கு ஏற்ற உதவியைச் செய்துவருவோ மாயின் எல்லாம் வல்ல கடவுள் நம்மை நல் வழியில் நடத்திப் பரத்தில் நன்மையை அளிப்பார். ஒவ்வொருவரும் அனுதாபம் என்னும் கருவியைச் சுத்தமாகவும் பல மாகவும் வைத்துக் கொள்ள ஆண்டவன் அருள்புரிவாராக. சுபம்! சுபம்!! சுபம்!!!

K. M. நாகராஜன்
கீழவிடயல். திரிச்சிரை போஸ்ட்.

---

# கைத்தொழில்

இப் பூவுலகின் கண்ணே மனிதவாழ்க்கைக்கு இன்றியமையாதது கல்விச் செல்வமும், பொருட் செல்வமுமே யாம். முற்காலத்தில் நமது தேசமானது இவ்விரு செல்வங்களிலும், இச் செல்வங்களுக்கு மூலமாகிய கைத்தொழிலிலும், மற்ற அரிய விஷயங்களிலும், சீரும் சிறப்பும் பெற்றிருந்தது என்பதை நமது முன்னோர்களாலும், பழைய நூல்களாலும் தெரிந்து கொள்ளலாம். அக்காலங்களில் நமது தேசத்திலிருந்தே, நமது தொழிலாளிகளாலும் நமது பெண்களாலும் செய்யப்பட்ட அரிய சாமான்களும், தற்காலத்தில் நமது நாட்டில் கோடிக் கணக்கான ரூபாய்க்கு வந்திறங்கும் துணிகளும், மேல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. அக்காலத்தில் நமது தேசமே கைத்தொழில் ஞானத்தில் அதிக தேர்ச்சி பெற்றிருந்த தென்பதற்குப் பல அத்தாட்சிக ளிருக்கின்றன. 1813-ஆம் வருஷத்தில் இங்கிலாந்து ஜனப்பிரதிநிதிகள் சபையில் சர்தாமஸ்மன்றோ என்னும் துரைமகனார் "இந்தியரைப் போல் கைத்தொழிலில் சாமர்த்தியமுள்ளவர்கள் இல்லை" என்று செப்பி இருக்கின்றார். முற்காலத்தில் நாகரீகரென்றும், சாஸ்திரீய விற்பன்னர் என்றும் உலகத்தாரால் மதிக்கப் பட்டவரின் சந்ததியாராகிய நாம் "குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக்காம்பு" போல், உடுக்க உடைக்கும், உண்ண உணவுக்கும் கூட பிறநாட்டை எதிர்பார்ப்பது யாரிட்ட சாபமோ அறியோம். கீர்த்தி பெற்றிருந்த நமது கைத்தொழிலானது, நமது ஊக்க மின்மையாலும், அறிவின்மையாலும், ஒற்றுமை இன்மையாலும், பொறாமைக் குணத்தாலும் அடியோடு பாழாயிற்று என்னலாம். நமக்கு வேண்டிய ஒவ்வொரு அற்ப சாமான்களும் கூட, யாதொரு தங்கு தடையின்றி அன்னியநாடு களிலிருந்து கிடைத்து வந்தால், அதுவே பெறும் பாக்கியமெண நமது ஜனங்கள் எண்ணினார்களே தவிர, நமது தேசத்துச் செல்வங்களெல்லாம் வெளி ஏறுவதையும்,

அக்காரணமாக நம்மிடம் தரித்திரம் குடிகொள்வதையும், அரைவயிறு கால்வயிற்றுக்குக் கூட அன்னமில்லாது தவிப்பதையும், பிணிகளெல்லாம் நமது இந்தியா தேசத்தையே உறைவிடமாகக் கொள்வதையும், நம்மவர்களின் ஆயுளும், க்ஷேமமும், குன்றிவருவதையும் கவனித்தார்க ளில்லை. ஐரோப்பா மகாயுத்தத்தின் காரணமாக அங்கிருந்து நமக்கு வந்துகொண் டிருந்த சாமான்கள் தடைப்படவே நாம் அன்னிய நாட்டை நம்பி இருந்ததால் பட்ட பாடும், படும் பாடும், இறைவனே அறிவார். இப்பொழுதுதான் பல பிரமுகர்களும், செல்வ வான்களும் விழித்துக்கொண்டு ஆங்காங்கே பற்பல மில்களை ஸ்தாபித்து வருகிறார்கள். அவைகள் முறையே வேலை செய்துவரின் நமது தேசத்திற்குப் பல நன்மைகள் உண்டாகுமென்பதில் தடையில்லை. ஆனால் பிறநாட்டின் போட்டியாலேனும், அன்னிய நாட்டுச் சாமான்கள் தாராளமாய் வர ஆரம்பித்ததாலும், ஊக்கமின்மையாலேனும் சில மில்கள்மூடப்படக்கூடும். மேலும் காந்தி யடிகள் கூறும் வண்ணம் மில்கள் ஏற்படுவதால் ஒரு சார்பாரே செல்வ வான்களாகக் கூடும். ஆனால் நமது தேசத்துத் தரித்திரம் தொலையவேண்டு மானால் நமது தேயத்தின் செல்வவான்கள், மத்திய வகுப்பார், எளியர் உள்பட ஒவ்வொரு ஆடவரும்பெண்டிரும், ஓய்வு நேரங்களில் தங்களுக்கிஷ்டமான ஒரு கைத்தொழிலைச் செய்து வரவேண்டு மென்பதை எவரும் மறுக்கார்.

க. சுப்பிரமணியம், கம்பளை,
இலங்கை.

---

## ஆரம்பக்கல்வி உபாத்தியாயர்களின் நிலைமை.

நண்பர்களே! இச்சஞ்சிகையின் 254-ம் பக்கத்தில் வெளியிடப்பட் டிருக்கும்,

**"ஆரம்பக்கல்வியும் சர்க்கார் சபைமெம்பர்களும்"**

என்ற விஷயத்தைப் பற்றிக் குறிப்பாக இரண்டொரு விஷயங்களைக் கூற வேண்டுவது அவசிய மெனக் கருதுகிறோம்.

**குறிப்பு**:— கல்வியபிவிர்த்திக்கு ஆரம்பக் கல்வியே அஸ்திவார மானதால் அதுவே பிரதானமான தென்பதைப் பற்றியும், நம் நாட்டில் அத்தகைய முக்கியமான கல்வியைப் போதிக்கும் உபாத்தியாயர்களின் பரிதாபமான நிலைமையைப்பற்றியும் பன்முறை நமது சஞ்சிகைகளில் நேயர்கள் கண்டிருக்கலாகும். இத்தகைய முக்கியமான பொதுநல விஷயத்தைப் பற்றி நமது அன்பார்ந்த சந்தாநேயர்களில் ஒருவரும் ஆரம்பக்கல்வி உபாத்தியாயர்களி லொருவருமாகிய ம-ா-ா-ஸ்ரீ, பரிமணப் பல்லவராயப் பிள்ளையவர்கள் மிக்க முயற்சி யெடுத்துக்கொள்ளுகிறார் என்பதும் யாவரு மறிந்ததே.

வேறு அனேகம் உபாத்திமார்களும் இப்பெருங் குறையைப் பற்றி நமக்கு எழுதியிருக்கிறார்கள். இன்னும் எழுதிவருகிறார்கள். ஆனால் யாவற்றையும் சஞ்சிகையில் வெளியிடல் சாத்திய மல்ல வென்பது நேயர்கள்

அறிந்தவிஷயமே. சமீபகாலத்தில் தென்காசி கன்னி ஸ்கூல் உபாத்தியாயர் ம-ா-ா-ஸ்ரீ, T. உலகநாத உபாத்தியாயர் வரைந்துள்ள கடிதத்தில் கீழ்க்கண்டவாறு கூறுகிருர்:—

" * * * உபாத்தியாயர்களின் நிலைமை அதிக கஷ்டமானதே. அக் கஷ்டம் வயிற்று மட்டிலுமல்ல, வேலைப்பாட்டிலும் கூட வருத்துகிறது. அவ்வறுமையினுல் சிறுமையும் ஏற்படுகிறது. வறுமையும் சிறுமையும் ஒன்றுகூடிய காலத்து, மெய்யும் மனமும் குன்றுகின்றன. மெய்யும் மனமும் குன்றியகாலத்தில், மதியும் கதியும் அழிகின்றன. நாம் இந்த அவஸ்தையைச் சகிக்க மாட்டாமல் தவிக்கின்ருேம். * * *"

இவ்விஷயத்தை உன்னிப்பார்த்தால் இதிற் கூறப்பட்டவை முழுதும் உண்மை யென்பது நன்கு விளங்கும். இது ஆரம்பக்கல்விக்கு, அதாவது நம் மக்களின் கல்வியபிவிர்த்திக்கு, எவ்வளவு தீங்கை விளைவிக்குமென்பது நாம் கூருமலே விளங்கும்.

இத்தகைய இடையூறைக் கல்வியிலாகா அதிகாரிகளும் சட்ட சபைகளில் அவயவிகளாயிருக்கும் நமது நாட்டு அறிவாளிகளாகிய கனவான்களுமே நீக்கி நம் நாட்டார் கல்வியறிவில் மேம்பாடடையும் வண்ணம் வழியுண்டாக்கக் கடமைப்பட்டவர்கள். இவர்களே யிதற்கு முயற்சியெடுத்துக் கொள்ளாது ஏழை உபாத்திமார்களென்று அலட்சியமா யிருந்துவிடின் நமது நாடு சீர்ப்படுவது யாங்ஙனம்?

சட்ட சபைகளுக்கும், நகரச் சங்கங்களுக்கும், தாலூகா ஜில்லா போர்டுகளுக்கும் அவயவிகளா யமர்ந்திருக்கும் கனவான்கள், சுய நலங்கருதாது தாய் நாட்டின் க்ஷேமத்திற்குப் பாடு படுவார்கள் என்ற நம்பிக்கையோடு ஜனங்களின் பிரதிநிதிகளாய்த் தெரிந் தெடுக்கப் பட்டவர்கள். "இவர்களில் அனேகர் அப்பதவியால் தங்களுக்குக் கிடைக்கும் சில சௌகரியங்களுக்காகவும், அதனுலுண்டாகும் செல்வாக்கு, கௌரவம் இவற்றிற்காகவுமே மிக்க பிரயாசைப்பட்டு அவயவிகளாய்ப் போய்ச் சேருகிருர்களேயன்றி, நம்மவர்களின் க்ஷேமத்திற்காக இவர்கள் பாடு படுவதில்லை" என்றும், "தாங்கள் எத்தொழிலைச் செய்யக் கடமைப்பட்டு அச்சபைக்குச் சென்ருர்களோ அத்தொழிலைத் தங்கள் மனச் சாக்ஷிப்படி தைரியமாய்ச் செய்வதில்லை" என்றும் நம் நாட்டாரில் அனேகர் கருதி யிருப்பதோடு, பகிரங்கமாய் அவ்வாறே பிரஸ்தாபிக்கிருர்கள். இக்காலத்தில் நமது நாட்டாரைப் பற்றி இத்தகைய அபிப்பிராயம் உண்டாவது நம் தாய் நாட்டின் க்ஷேமத்திற்கு எவ்வளவு இடையூறை யுண்டாக்கு மென்பதைப் பற்றி அறிவாளிகள் சிந்திக்கப் பிரார்த்திக்கிருேம்.

கொஞ்ச காலமாய் நாம், நமக்கு அனேக சுதந்தரங்களைத் தரவேண்டுமென்று அரசாங்கத்தாரை மன்ருடிக் கேட்டுக் கொண்டிருக்கிருேம். கருணை நிறைந்த நமது துரைத்தனத்தார் இப்போது நமக்குச் சில சுதந்தரங்களை யளித்து ஒரு சீர்த்திருத்தச் சட்டத்தை ஏற்படுத்தி யிருப்பதாய்த் தெரிகிறது. ஆனுல் அது எப்படி யிருக்கிற தெனில், ஒருவன் "எனக்கு மாம்பழம் வேண்டும்" என்ருல், தூரத்திலிருக்கும் ஒரு மேடையைச் சுட்டிக்காட்டி "அதோ தெரிகிறதே அம்மேடைக்குச் சென்று அதன்மே லிருக்கும் பழத்தை யெடுத்துக் கொள்" என்று கூறுவது போ

**பிழைத் திருத்தம்.**

263-ம் பேஜிக்குப் பக்கத்து பேஜ் நம்பர் 642 யென்று இருப்பதை 264 என்று திருத்திக் கொள்ளவும்.

---

லிருக்கிறது. அவன் ஜாக்கிரதையாய் அவ்வழியே சென்ருலன்றிக் கோரிய பழத்தை யடையவே மாட்டான். ஆகையால்,

இப்போது தாய் நாட்டின் க்ஷேமத்திற்காக உழைக்கக் கருதி மேற் கண்டபடி அவயிவிகளாய்ச் செல்லும் கனவான்கள் ஒவ்வொருவரும் சற்றும் சுய நலத்தைக் கருதாது பொது நல நோக்கத்தோடு தங்கள் கடமைகளைச் செலுத்துவார்க ளாகில், பார பட்சமின்றிக் குடிகளிடத்துக் கருணை வைத்துச் செங்கோலோச்சும் நமது உத்தம துரைத்தனத்தார் இன்னும் உயர்வான சுதந்தரங்களை நமக்களிப்பார்க ளென்பது நிச்சயம்.

ஒரு நாட்டின் நற்பதவிக்குக் கல்வியே காரண மாதலானும், பிரதமக் கல்வி, கல்விக்கு அஸ்திவார மானதாலும் அதைப் போதிக்கும் ஏழை யுபாத்தியாயர்களின் நிலைமையை யலட்சியமாய்க் கருதாமல் இக்கனவான்கள் கொஞ்சம் சிரத்தை யெடுத்துக் கொண்டு அவர்கள் கோரமான குறைகளை நீக்க முயல வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிரேம்.

உபாத்தியாயர்களும் தனித்தனி யாங்காங்கு முறை யிட்டுக் கொள்வதில் பயனில்லை. இவர்கள் சங்கங்களனைத்தும் ஒன்று கூடி யேகோபித்துத் தங்கள் குறைகளைத் துரைத்தனத் தார்க்கு அறிவித்துக் கொண்டு ஊக்கத்தோடு பாடு பட்டால் இவர்கள் குறைகள் நீதி தவிருக்கருணை பொருந்திய நமது இராஜாங்கத்தாரால் நீக்கப்படும் என்பதில் சற்றும் சந்தேக மில்லை. எல்லாம் வல்ல தயாநிதியாகிய பரமன் அருள் புரிவாராக.

**பத்திரிகாசிரியர்.**

## ஓர் எச்சரிக்கை

நேயர்களே! கடந்த மார்கழிமீ சஞ்சிகையின் 230-ம் பக்கத்தில் ம-ா-ா-ஸ்ரீ C. நடராஜ செட்டியார் (வயல் பட்டி, வீரபாண்டி போஸ்ட்.) என்பவரால் எழுதி யனுப்பப் பட்ட "சம்பாஷணை" என்ற விஷயத்தை யாவரும் கண்ணுற்றிருப்பீர்க ளென்றே நம்புகிருேம். இப்போது அது விஷயமாய் நமது சந்தா நேயரில் ஒருவரான ம-ா-ா-ஸ்ரீ K. J. தாவுத் சுல்தான் சாஹிப் (மேலக் காவேரி) என்பவர், அச் "சம்பாஷணை" என்ற வியாசம் பிரம்மஸ்ரீ T. V. செல்லப்ப சாஸ்திரியார் அவர்களால் எழுதப்பட்டிருக்கும் 5-ம் பாட புத்தகத்திலிருந்து முழுதும் அப்படியே நகல் எடுத்தனுப்பப் பட்ட தென்று தெரிவிக்கிறார். அவ் வைந்தாம் பாடத்தின் 21-வது பக்கத்தில் இவ்விஷயம் இருக்கக் கண்டோம். மேலும் இப் புத்தகத்தின் அச்சுரிமை ரிஜிஸ்டர் செய்யப் பட்டிருக்கிறது.

மேற்படி செட்டியார் தாம் எழுதியனுப்பிய வியாசத்தோடு நமக்கு எழுதிய கடிதக் குறிப்பில்,

"அடியிற் கூறப்போகும் சம்பாஷணை யென்ற விஷயம் (பள்ளிக்கூடப் பிள்ளைகளின் உபயோக மாக பாட புத்தகத்தி லிருந்தாலும்) கல்விமான்களாகிய பெரியோரும் முக்கியமாக அறியத்தக்க விஷயங்களில் இதுவு மொன்ருகையால் இவ்விடத்தில் கொஞ்சம் விரிவாய்க் கூறுவோம்"

என்று எழுதி யிருந்தார். இது, ஒரு புத்தகத்தில் சுருக்கமா யிருப்பதை இவர் விரிவாக எழுதி யிருக்கிறார் என்று பொருள் படுவதால், இதைப் பிரசுரிக்கக் கருதி, அப்புத்தகத்தின் பெயரைத் தெரிவிக்கும்படி அவருக்கு ஒரு கார்ட் எழுதினோம். பிறகு நாம் ஒரு ஊருக்குச் சென்று அங்கு சுகவீன மடைந்து பத்து நாட்களுக் கதிகமாய்த் தங்கிவிட நேர்ந்ததால் இடையில் சஞ்சிகை காலக்கிரமப்படி வெளியாய் விட்டது.

நேயர்களே! ஒருவர் அச்சுரிமை பெற்றிருப்பதை, அவருடைய அனுமதியின்றி இன்னொருவர் வெளியிடுவது பெருங் குற்றம். ஆகையால் இதைப் பற்றி மேற்படி செட்டியார், சாஸ்திரியார் அவர்களை மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டுமாய்த் தெரிவிக்கிறோம். இத்தகைய விஷயம் நமது சஞ்சிகையில் வெளியிட நேர்ந்ததற்கு மிக்க விசனிக்கிறோம்.

அந்தோ! வியாசம் எழுதுவதற்கு வேண்டிய கல்வியும் அனுபவமும் அடையாதவர்களில் அனேகர் தாங்கள் வியாசம் எழுதியதாய்த் தங்கள் பெயர் ஒரு சஞ்சிகையில் வெளிவருவது மிக்க கௌரவம் என்று கருதுகிறார்கள். இல்லாத கௌரவத்தை யடையக் கருதும் ஒருவன் தனக்கு உண்மையிலுள்ள கொஞ்சம் கௌரவத்தையும் போக்கிக் கொள்கிறான். உலகிலுள்ள எந்தக் கௌரவமுமே மதிக்கத் தக்கதல்ல வென்றும், அக்கௌரவமும் அகௌரவமும் நாயின்மேலேறிச் சவாரிசெய்யும் ஒருவன் தான் நன்றாகச் சவாரிசெய்வதைக் கௌரவமாகவும், தவறி விழுவதை அகௌரவமாகவும் கருதுவதைப் போன்ற தென்றும் ஆன்றோர் அருளி யிருக்கின்றனர்.

“நாயேறி வீழ்கிலென் நடாத்துகிலென் ஞானிக்குப்
பேயா முலகம் பழித்தென் புகழ்ந்தென்”

என்று வள்ளலார் கூறி யிருக்கிறார்.

அனுபவமாய் உலகோர் வெளித் தோற்றத்தையும், செல்வம், உயர் பதவி, அதிகாரம் முதலியவற்றையும் கண்டும், சுயநலங் கருதியுமே பெரும்பாலும் ஒருவனைக் கௌரவப் படுத்துகிறார்கள். உண்மையான கௌரவத்திற்குப் பாத்திரவானா யிருப்பவன் செல்வம், அல்லது அந்தஸ்து அதிகாரம் ஒன்று மில்லாதவனாயின் அவனை யொருவரும் கௌரவமாய் மதியார். அவனை யலட்சியமே செய்வார்கள். இது மட்டுமல்ல, ஒருவனிடம் எவ்வளவோ உயர் குணங்களிருந்து ஏதேனும் ஒரு அற்ப குற்றமுமிருந்தால், இந்த உலகோர் அவனுடைய நற்குணங்களனைத்தும் அடியோடு விட்டுவிட்டு, அவனிட முள்ள அந்த ஒரு அற்ப குற்றத்தையே பிரமாதமாகக் கூறித் தூற்றுவார்கள். நண்பர்களே! இத்தகைய உலக கௌரவத்திற்கு ஆசைப்படுதல் தகுதியா என்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். மனச் சாட்சிக்குச் சம்மத மில்லாததையும், நம்மறிவிற்குப் பாபம் என்றும், இன்னொரு ஆன்மா விற்கு வருத்த முண்டாக்கு மென்றும் தோன்றுகிற செய்கைகளை நீக்கி யொழுக வேண்டுவதும், பிறர்க்குச் செய்யும் நன்மைகளைப் புகழ் முதலிய எவ்விதப் பிரதி பலனும், சுய நலமும், கருதாமல் செய்யவேண்டியதுமே நமது கடமையன்றி, உலக கௌரவத்தை நாடி ஒன்றைச் செய்வது ஒரு போதும் அறிவாளிகள் செய்கை யாகாது.

அதிலும் கல்வியில் கௌரவத்திற் கெதிர் பார்ப்பதும், அகங்காரம் கொள்வதும் அறிவீனத்திலும் அறிவீனமான செய்கைகளே யாகும். அக்

கௌரவமும் கிட்டாமல் உள்ள கௌரவமும் போய் விடும்; அந்த அகங் காரமும் நிலைக்காமல் அவமானமே யுண்டாகும். எனெனில் கல்விக் கட லுக்குக் கரையில்லை யாதலால், முழுதும் கற்றவரில்லை; அதோடு ஒன்று மறியா மூடரு மில்லை.

"எல்லா மறிந்தவரும் ஏதுமறி யாதவரும் இல்லையெனு மிவ் வுலகம்..." என்றார் தாயுமானவர்.

இதனால் எப்போதும் நம்மினு மதிகமாய்க் கற்றோர் எண்ணிறந் தோர் இருப்பார்கள் என்ற உண்மையை யறிந்து, வீண் கௌரவத்திற் காசை கொள்ளாமலும், நாம் அதிகம் கற்றிருக்கிறோம் என்று அகங்கா ரம் அடையாமலும் இருப்பதே அறிவாளியின் இலட்சண மாகும். இனி யேனும் நமது ஆனந்தனுக்கு இத்தகைய துன்பங்களை யொருவரும் செய் யாதிருக்க வேண்டிக் கொள்கிறோம்.

—— பத்திரிகாசிரியர்.

## சுதேசாபிமானம்

ஒவ்வொருவரும் தாம் பிறந்த வூரிலபிமான முள்ளவர்களா யிருப்பார் கள். அஃதாவது எப்பொழுதும் எவ்விடத்தி லிருந்தாலும் தம்மூரின் யோகக்ஷேமங்களைப் பற்றி கேள்வியுற வேண்டுமென்றும், அதிசீக்கிரத்திற் றம்மூர் போய்த் தம் முறவினர்களோடு கலந்து களிக்கவேண்டு மென்றும் நினைப்பார்கள். பிறந்தவூர் எவ்வளவு அற்பமான தாயினும் அதுவே அவ ருக்குச் சுவர்க்க லோகமாய்த் தோன்றும். அவ்விடத்திலுள்ள மரமடர்ந்த சோலைகளும், குளங்களும், சிற்றாறுகளும், வயல்களும், அங்குப் பிரகாசிக் கும் சூரிய கிரணங்களும் அவர் மனத்திற்கு உற்சாகத்தை விளைவிக்கும். வேற்று மனிதர்களுக்கு வெறுப்பை யுண்டாக்கக் கூடிய விஷயங்கள், அவ் வூரிற் பிறந்து வளர்ந்தவர்க் கின்பத்தையே தரும். தம்முடைய கவலையற்ற பாலப்பருவத்தைக் கழித்தவிட மாதலின், அப்பொழுதுண்டான மன மகிழ்ச்சியின் ஞாபகத்தா லப்பொருள்க ளனைத்தும் வனப்பெய்துகின்றன. அப்பொழுது முதல் நட்ட நண்பர்கள் அங்கு வசிப்பதனாலும் அவ்வூர் மனத்தைக் கவரும். ஆதலின், தான் பிறந்த விடத்தை யன்புடனும், அகமகிழ்வுடனும் நேசியாதவ னொருவனு மில்லை.

அப்படி யொருவ னிருக்க நேரிடில், அவனை ஒவ்வொருவருங் குறித் துக் கொள்ளவேண்டியது. எனெனில் அவன் இயற்கைக் குணத்தையே துறந்தவ னாதலின், எத் தீச்செயலுஞ் செய்யத் தக்கவன்.

அத்தகையானுக் கெவ்வளவுதான் செல்வ மிருந்தாலும், அதிகாரமும் அந்தஸ்து மிருந்தாலும், அவன் அவைகளைத் தன்னாட்டார் மாட்டுபயோ கப் படுத்தாது சுயநயத்திலேயே செலவிடுகிறா னாதலின், அவனுக் கவைக ளிருந்து மிலவாகின்றன. இத்தகையான் இறக்கும் பொழுது, புகழுடம் பும் பூதவுடம்பு மொருங்கே யழிந்துவிடுவதனால், இவன் பொருட்டுத் துய ரப் படுபவர்களும், இவனைப் பற்றிப் பாடிப் புகழ்பவர்களு மில்லாது போகி றார்கள்.

தனது ஜனன பூமியினிடத்து அபிமானமுள்ள ஒருவன் தன் னபிமா னத்தை அத் தேசத்திலுள்ள இயற்கைப் பொருள்க ளிடத்தும் செலுத்து

வதனுடன் நிறுத்திவிடக் கூடாது. அஃதன்று உண்மை யபிமானம். 'ஊரடங்கிற்று' என்னுமிடத்து ஊரிலுள்ளா ரடங்கினர்க ளென்று இடவாகுபெயராய்ப் பொருள் கொள்வதுபோல, தேசாபிமான மென்றால் தேசத்திலுள்ளவர்களிடத் தபிமான மென்று கொள்ளவேண்டும். அஃதாவது எவனொருவன் தன்னுலியன்ற வளவும் தன்நாடும் நாட்டாரும் தழைத்தோங்குமுபாயங்களைத் தேடுகின்றானோ அவனே தேசாபிமானி. அவன் தன்னாட்டிற்கும் தன்னாட்டார்க்கு மெவ்வாற்றானும் துன்பம் வாராதபடி இன்பத்தையே தேடுவான். இப்படித் தேடுவதிற் றன்னுடையகாலம், பொருள், தேகசௌக்கியம், சுயேச்சை முதலியவைகளை யிழக்க நேரிடினும் கவனியான். தன்னுயிரையும் விட்டுவிடச் சம்மதிப்பான்.

தன்னாட்டார்கள் தவறியவற்றின் அவர்களின் தவறைத் தவிர்க்க முயலுவான். அவர்களிடத்துக் குறை கண்டுழி அதை நிரப்புவான். தன்னாட்டைக் காப்பாற்றும் பொருட்டுத் தன்னுயிரையுங் கொடுக்க வுடன்படுவான். நமது தேசத்தில் ஜனங்களின் நன்மைக்காகத் தமது காலம், பொருள், சுகம், சுயாதீனம் முதலியவைகளைக் கொடுத்துவந்த தாதாபாய் நவுரோஜி, சுரேந்திரநாத் பானர்ஜி முதலியவர்கள் பழுத்த தேசாபி மானிகள். இவர்களைப் போலவே நாமொவ்வொருவரும் தேசாபிமானியாக முயலும்படி கடவுள் அருள் புரிவாராக.

A. N. வேங்கிடாஜலம்,
சத்தியவிஜய நகரம், வட ஆற்காடு ஜில்லா.

---

## நமது முன்னோர்களின் அறிவுப் பிரகாசத்தை நிரூபிக்கும் சில குறிப்புகள்.

### பாரததேச மஹிமா.

பாரத தேசமானது ஸகல ஐசுவரியமும் பெருமையும் வாய்ந்தது. ரமணீயமானது. ப்ரகிருதியின் சிறந்த குணங்களா லலங்கரிக்கப்பட்டுப் பூலோக ஸ்வர்க்கம்போல் விளங்கு கின்றது.

பாரத தேசத்தவர்களோ சிறந்த புத்தியும் பகுத்தறிவும் வாய்ந்தவர்கள். ஈசனாலளிக்கப்பட்ட அவ்வறிவின் பயனை விசேஷமா யடைந்தவர்கள். உலக வாழ்விலுள்ள உத்தம தத்துவங்களை ஆராய்ந்து அறிந்தவர்கள். ப்ளேடோ, காண்ட் முதலான மேற்கு தேச ஞானிகளின் கொள்கைகளை யறிந்த அறிஞர்கள்கூட ஆராய்ச்சி செய்யத் தக்க உயர்ந்த சித்தாந்தங்களை பாரததேசத்தவர் நிரூபித்திருக்கின்றனர்.

க்ரீக், ரோமன், ஸெமடிக், யூத, ஜாதியாரின் மதங்களை மாத்திரமனுசரித்து அவைகளுக்கிணங்க நமது ஐரோப்பியரின் கொள்கைகள் அமைந்திருக்கின்றன. நமது கொள்கைகளில் ஆங்காங்குள்ள பிழைகளைத் திருத்திக் கொள்ளவும், நமது மெய் வாழ்வைப் பூரணமாகவும், ஸர்வகாருண்யமாகவும், ஸர்வோபகாரமாகவும், செய்துகொள்ளவும், இம்மையிலும் சிறந்த மறுமை யொன்றுண்டென்ற மெய்ஞ்ஞானத்தை உண்டு பண்ணவும் தக்க சாதனங்களைக் கூறும் சிறந்த நூல்கள் பாரததேச நூல்களே!

பாஷாஞானம், மதஸம்ப்ரதாயம், கல்வி, கலை, பௌதிக— அதி பௌதிக சாஸ்த்ரங்கள்—இவைகளில் பூர்வீகர்கள் எம்மட்டும் அறிந்திருக்கிறார்கள் என்பதையறிய வேண்டுமானால், பாரததேச பூர்வீகர் அறிந்து எழுதிவைத்திருக்கும் சிறந்த நூல்களை வாசித்துத்தான் அறிய முடியும்.

[மாக்ஸ் முல்லர்.

எழுதிய "India and what it can teach us?"]

உலகெங்கும் பரவியிருக்கும் அறிவுக்கும், மதஸம்ப்ரதாயங்களுக்கும் ஜன்மபூமி இந்தியா என்றே சொல்ல வேண்டும்.

[ப்ரொபஸர்—ஹீரன்]

---

இந்துக்கள், இப்போது கேவலமான நிலைமையிலிருந்தபோதிலும், இவர்களின் முன்னோர்கள், முற்காலத்தில் கலைகளிலும் சஸ்திரவித்தைகளிலும்எவ்வளவோ சிறந்திருந்தார்கள். ராஜாங்க முறைகளோ ஆனந்தகரமாய் அமைந்திருந்தன. சட்ட நிரூபணங்களில் தேர்ச்சியடைந்திருந்தார்கள். அறிவிற் சிறந்தவர்கள். (Calcutta Review Dec. 1861)

## பாஸ்கராசாரியார்.

(ஜனனம்—சகம் 1036=1114 கி. பி.)

தக்ஷண தேசத்தில் ஸஹ்ய மலைக்கடுத்த **பீஜபூர்** என்ற கிராமத்தில், கர்னாட பிராம்மண குலத்தில், பாஸ்கராசாரியார் பிறந்தார். இவர் தந்தை மஹேசுவர உபாத்தியாயர். ஸாந்தில்ய கோத்திரம்.

இவர் பால்ய வயதிலேயே வேத-வேதாங்கங்களை எல்லாம் கற்றுணர்ந்து தனது 36-ம் வயதிலேயே **சித்தாந்த சிரோமணி** என்ற அரியவட மொழி நூலையும் இயற்றினார். கணித சாஸ்த்ர வான சாஸ்த்ரங்களில் மிக்கத் தேர்ச்சியடைந்து பல நூல்களும் இயற்றி இருக்கிறார். அவைகளில் பல நவீன ஆதாரங்களாகவும், மேற்கு தேசங்களில் சில மொழி பெயர்க்கப்பட்டன வாகவும் இருக்கின்றன.

12-ம் நூற்றாண்டில் இந்தியாவில் வந்த அரேபியர் பாஸ்கரர் நூல்களில் பலவற்றைத் தம் அரபி பாஷையில் மொழிபெயர்த்தார்கள்.

அக்காலத்தில், ஐரோப்பாவிலுள்ள ஸ்பெயின் தேசம் முழுமையும் அரேபியர் ஆட்சிக் குட்பட்டிருந்தது. 12-ம் நூற்றாண்டின் இறுதிக்குள், பாஸ்கரர் நூல்களில் பல, ஐரோப்பாவில் அநேக இடங்களில் ப்ரசித்தமாய்ப் புகழ்பெற்று விளங்கின.

## பாஸ்கராசாரியார் இயற்றிய நூல்கள்.

**சித்தாந்தசிரோமணி**

(1) **கோளாத்யாயம்**—வான நூல் (or descriptive Astronomy.)

(2) **கணிதாத்யாயம்**—வான கணிதம் (Mathematical Astronomy.)

(3) **பீஜகணிதம்**—(Algebra.)

**கர்ணகுதூஹல?** த்ரிகோணமானி (Trignometry)

**லீலாவதி** கணிதசாஸ்த்ரம் (அக்பர் காலத்தில் பாரஸீக பாஷையில் தர்ஜுமா வாயிற்று.)

பாஸ்கராசாரியார் விவரித்திருக்கும் சில முக்கிய விஷயங்கள்.

1. நிறை அளவு, நீட்டலளவு (Weights & Measures)
2. தசாம்ச கணிதம் (Decimal System)
3. எண்வகை கணிதம்—கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல், சதுர அளவு (Square), கன அளவு (Cube), சதுர மூலம் (Square root), கன மூலம் (Cube root).
4. பின்ன கணிதம் (Fractions).
5. Mixed Numbers.
6. Rules of Cipher (பூஜ்ய விதிகள்).
7. Equations (ஸாம்ய கணனம்).
8. Rule of Three.
9. வட்டிச்சிட்டை வகையறா.
10. வியாபாரம்.
11. Geometrical progressions (குணிதாவளி).
12. திரிகோண, சதுஷ்கோண ரேகா கணிதம் முதலானவைகள்.

ஆர். எஸ். நாராயணஸ்வாமி அய்யர், B. A., B. L.

* இவை இவ்வருட ஆவணி மீ வெளிவந்த "கல்வி" என்ற சஞ்சிகையிலிருந்து பொது நலங் கருதி எடுத்துக் கொள்ளப் பட்டன.

---

## துரைத்தன அறிவிப்பு சங்கத்தா (பப்ளிஸிடி போர்டா) ரது 26. நெ. விளம்பரம்.

அநேக ஜனங்கள், நாட்டு வைத்தியனிடத்திலாவது மருந்துக் கடைக்காரனிடத்திலாவது, பூரம் என்கிற (Calomel) மருந்தை வாங்கிச் சாப்பிடுவதினால், வயிற்று நோய், பல்ஈறு நோவு முதலிய வியாதிகளால் கஷ்டப்படுகிறார்கள் என்று தெரிகிறது. அடியில் வருவதுதான் இதற்குக் காரணம். கவலையீனமாய்த் தயார்செய்யப்படும் **பூரத்தில் ரசத்தின் வீரம்** (Perchloride of Mercury) தங்கியிருக்கும். அது விஷம். ஆகையால், எல்லா நாட்டு வைத்தியர்களும், மருந்துக் கடைக்காரர்களும், தாங்கள் வியாதிக்காரர்களுக்குக் கொடுக்கிற அல்லது விற்கிற **பூரமானது**, சரியாகத் தயார்செய்யப் பட்டதாவென்று மிகக் கவனமாய்ப் பார்த்து நிச்சயப்படுத்திக்கொள்ளவேண்டும். **பூரத்தை** வாங்கிச் சாப்பிடும் ஜனங்கள், தாங்கள் சாப்பிடப்போகும் **பூரம்**, நம்பிக்கையுள்ளவர்களால் செய்யப்பட்டதாவென்று நன்றாய் விசாரித்து, திட்டமாய் அறிந்துகொள்ளும்படி இதினால் தெரிவிக்கிறோம்.

2. சாதாரணமாய், **ரசத்தின் வீரம்** 4-பாகம், **ரசம்** 3-பாகம் சேர்த்து நன்றாய் அரைத்துக் கலந்து, அடுப்பில் வைத்துக் காய்ச்சி, அதிலிருந்து வரும் ஆவியை, ஒரு குளிர்ந்த பாத்திரத்தில் விட்டுச் சேர்த்து, **பூரம்** செய்யப்படும். அந்தக் குளிர்ந்த பாத்திரத்தில் படிந்திருக்கும் வெள்ளைத்தூள் தான் சுத்தமாக்கப்படாத **பூரம்**. அதில், **ரசத்தின் வீரம்** கலந்திருக்கும். இதைக் சுத்திசெய்வதற்கு வெந்நீரில் அந்தத் தூளைப்போட்டு நன்றாகக் கலக்கினால், ரசத்தின் **வீரம்** நீரில் கரைந்துபோகும், **பூரம்** கரையாது.

வெந்நீரைச் சற்றே அசையாமல் வைத்திருந்தால், அடியில் சுத்தமான **பூரம்** தங்கியிருக்கும். மேல் நிற்கிற தண்ணீரைக் கீழே வார்த்துவிட்டு மறுபடியும் பாத்திரத்தில் வெந்நீர்விட்டு, முன்மாதிரியே கலக்கி மேல் நிற்கிற தண்ணீரை இறுத்துவிடவேண்டும். இம்மாதிரி மேல் நிற்கிற தண்ணீரை இறுத்து அத்தண்ணீரில் **நவச்சார திராவகத்தைச்** சேர்த்தால் வெள்ளைக் கலங்கல் உண்டாகாமலிருக்கிறவரையில், **பூரத்தை** முன்சொல்லியபடி கழுவிக்கொண்டே யிருக்கவேண்டும். அந்த வெள்ளைக் கலங்கல் உண்டாகிறவரையில் பூரம் சுத்தியாகவில்லை என்றறிய வேண்டும்.

3. **பூரத்தில் ரசத்தின் வீரம்** இருக்கிறதா இல்லையா வென்று கண்டு பிடிக்க அடியில் வருமாறு செய்யவேண்டும். ஒரு கண்ணுடி (glass) டம்ளரில் கொஞ்சம் வெந்நீர் விட்டு அதில் ½ தேய்க்கரண்டி யளவு பூரத்தை யெடுத்துப்போட்டுச் சில நிமஷநேரம் அதை நன்ருய்க் கலக்கிப் பிறகு அது அடங்கும்படி சும்மா விட்டுவைக்கவேண்டும். மேல்தண்ணீரை இறுத்து ஒரு பாத்திரத்தில் வார்த்து, அதில் கொஞ்சம் **நவச்சார திராவகத் துளிகளை** விட்டால், அதில் வெள்ளைக் கலங்கல் தோன்றினுல், அதில் **ரசத்தின் வீரம்** இருப்பதாகத் தெரிந்து கொள்ளலாம். அந்தப் **பூரத்தைச்** சாப்பிட்டால் கெடுதி உண்டாக்கும்.

## போலி 100 ரூபாய் காயித நாணயங்கள் (Notes) அறிவிப்புச் சங்கத்தாரிடமிருந்து.

சென்னை ரெயில்வே போலீஸ் டிப்டி **இன்ஸ்பெக்டர் ஜெனரலிட**மிருந்து அடியில்கண்ட எச்சரிப்பு வந்திருக்கிறது :—

1914-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 24-ம் தேதி போட்ட BD/74 குறியிடப்பட்ட பித்தலாட்ட மான நூறு ரூபாய் நோட்டுகள் (Notes) ஜாஸ்தியானவை இந்த ராஜதானியில் புழங்கிவருகின்றன. இந்த பித்தலாட்டமான நூறு ரூபாய் நோட்டுகள் கொஞ்சம் மெல்லிதாகவும், எண்ணெய் பட்டதாகவு முள்ள தாளில் அச்சடிக்கப்பட் டிருக்கின்றன. அவற்றிலுள்ள நீரடையாளம் (water marks) மிக இலேசாகவு மிருக்கும். இந்தப் போலி காயித நாணயங்கள் வெகு சாமர்த்தியமாய்ச் செய்யப்பட் டிருக்கின்றன. சாதாரண மனிதர் ஏமாந்துபோகக்கூடும். இந்த (BD/74) அடையாளமிட்ட உண்மையான **நூறு நபாய் நோட்டுகள்** (notes) இல்லை.

---

## சிறுவர்கள் சுருட்டுப் பிடிப்பதாலுண்டாகும் தீமைகள்

(ம-ா-ா-ஸ்ரீ ருவ் ஸாஹேப் டாக்டர் U. இராமராவ் அவர்களால் எழுதப்பட்டது.)

இக்காலத்தில் சுருட்டுப் பிடிக்கும் கொடிய வழக்கமானது நம் நாட்டுச் சிறுவர்களை உறுதியாய்ப் பற்றிக்கொண் டிருக்கிறது. பத்து வயது பனிரண்டு வயதுடைய சிறுவர்கள்கூட அதிகமாய்ச் சிகரெட் பிடிக்கிருர்களென்பது நாமனைவரும் அறிந்த விஷயமே. சுருட்டுப் பிடிப்பதால், அதிலும் முக்கியமாய்ச் சிறுவர்கள் பிடிப்பதால், உண்டாகும் தீங்குகள் அனேகம்.

## சுருட்டுப் பிடிப்பதிலுள்ள சுபாவ குணங்கள்.

புகையிலையை வாயிலடக்கிக் கொள்வதும், மூக்குத்தூள் போட்டுக் கொள்வதும் (புகையிலையி லுள்ள மஸ்து குணமான) நிகோடைன் என்ற வஸ்து (ஒருவித பாஷாணம்) அதிலிருப்பதினாலேயே. புகையிலையிலுள்ள கெட்ட குணங்களைக் கூறு முன் அதில் இருப்பதாய்க் கருதப்படும் நற் குணங்களைப் பற்றிக் கூறுவது நலம் எனக் கருதுகிறோம். புகைச் சுருட்டுப் பிடிப்பது மூளைக்கும் இருதயத்திற்கும் சுறு சுறுப்பை யுண்டாக்கு கிறதென்றும், மலச்சிக்கலை நீக்கித் தாராளமாய் மலசுத்தியாகச் செய்கிறதென்றும் கூறப்பட்டிருக்கிறது. சுருட்டுப் பிடிக்கலா மென்பதற்கு இது தக்க நியாய மாகாது. ஏனெனில் அதனால் உண்டாகும் நன்மைகள் மிக அற்ப மாகவும் தீமைகள் மிக்க அதிக மாகவும் கொடியன வாகவு மிருக்கின்றன.

புகையிலையிலுள்ள பிராணபத்தை யுண்டாக்கக் கூடிய **விஷத்திற்கு நிகோடைன்** என்று பெயர். அது ஜலத்தில் கரையக் கூடியது. சுருட்டுப் பிடிக்கும்போது சுருட்டில் நெருப்புப் பற்றியிருக்கும் இடத்தில் அப்பாஷாணம் புகையிலையி லிருந்து பிரிக்கப்பட்டு வெளிக் கிளம்புகிறது. (அது ஜலத்தில் கரைந்து போவதென்று முன்னமே கூறி யிருக்கிறோம்.) சுருட்டு பற்றிக் கொண்டே போகையில் புகையிலையிலிருந்து ஜலமும் கசிந்து வெளிப்படுகிறது. அச்சலத்தால் ஈரமாக்கப்பட்ட புகையை உள்ளுக்கிழுக்கும்போது, அப்புகை புகையிலையில் நுழைந்த பின்பே வாய்க்குள் செல்வதால் அப்புகையிலையிலுள்ள நிகொடைன் பாஷாணத்தில் கொஞ்சம் கூடவே (அந்த ஈரப்புகையால்) இழுக்கப்படுகிறது. இவ்வாறு கொஞ்சம் நிகொடைன் பாஷாணம் தேகத்தில் போய்ச் சேர்கிறது. ஒன்று அல்லது இரண்டு துளி நிகொடைன் பாஷாணம் இரண்டொரு நிமிடங்களில் ஒருமனிதனைக் கொன்று விடும். ஒரு துளி ஒரு நாயை அல்லது பூனையை மூன்று நிமிடங்களில் கொன்று விடும். 20, 30 கிரெயின் புகையிலையின் கஷாயம் ஒரு மனிதன் தேகத்தில் பிரவேசித்தால் மரணத்தை யுண்டாக்குகிற தென்று அறியப் பட்டிருக்கிறது.

சுருட்டை மிதமாய் உபயோகித்தாலும் குன்மம், தலைவலி, நடுக்கம், தலைக் கிறுகிறுப்பு, [redacted]க்காய்வலி, க்ஷயரோகம் இவைகளை யுண்டாக்குகிறது. புகையிலை கண்பார்வைக்கு என்ன பலனைத் தருகிறதென்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்த டாக்டர் டௌலிங் என்பவர் பின் வருமாறு கூறுகிறார்:—

“ஒரு புகையிலைத் தொழிற் சாலையில் வேலை செய்பவர்களில் 150 மனிதர்களின் கண்பார்வையைச் சோதனை செய்து பார்த்ததில், அவர்களில் சற்றேறக்குறைய 50 பெயர்களுக்குக் கண்பார்வை மிக்க அதிகமாய்க் குன்றிப் போய் இருந்தது. 30 பேர்களின் பார்வை மிக்க அபாயகரமாய் க்ஷீணித்துப்போ யிருந்தது. அவர்கள் பார்வை மங்கலடைந்து போயிருந்தது. 75 பேர்களுக்குக் கண்மணி சுருங்கிப் போய்க் கொண்டே யிருந்ததோடு, பார்வையும் குறைந்து கொண்டே யிருந்தது. புகையிலை கண்பார்வைக்குக் கெடுதி செய்வது போலவே தேகத்திலுள்ள ஒவ்வொரு நரம்பிற்கும் கெடுதியே செய்கிறது.” (இது நன்கு கவனிக்கத் தக்கது.)

புகையிலை நல்ல தேக பல மில்லாத சிறுவர்கள் தேகத்தில் இரத்தம் பரவச் செய்யும் அவயவங்களுக்கு இடையூறு செய்து, இருதயத் துடிப்பை அதிகப்படுத்தி, மனோ சக்தியைக் குறைத்து, ஞாபக சக்தியைக் கெடுத்து தொண்டை, ஈரல் இவற்றில் எரிச்சலை யுண்டாக்குகிறது. டிக்ஸன் மான் என்ற பண்டிதர் "நாட்பட அதிகமாகச்சுருட்டுப்பிடிப்பதால் திடீலென்று இருதயத்தின் தொழில் தடைப்பட்டுப் போகக்கூடும். சில சந்தர்ப்பங் களில் அது மரணத்தையும் உண்டாக்கும்." என்று கூறி, திருட்டாந்த மாக ஒரு மனிதன் பல வருடங்களாகத் தினம் பத்து சிகாரெட்டுகள், இன்னும் அதிகமாகக் கூட, பிடித்துக் கொண்டிருந்த தாகவும், அவனு டைய இரத்த நாளங்கள் பலகீனப் பட்டுப் போய், கண் பார்வை மங்கி விட்ட தாகவும், பிறகு அவன் 45-வது வயதில் திடீலென்று இருதயத்தின் தொழில் தடைப்பட்டதால் மரண மடைந்த தாகவும் கூறுகிறார். பிரஞ்சு தேசத்து வயித்திய சங்கத்தின் அவயவிகளில் ஒருவர் "நாட்டில் ஜனங்க ளுக்காக எவ்வளவு அதிகமாய்ப் புகையிலை செலவாகிறதோ அவ்வளவு அதிகமாய்ப் பைத்தியம், சாதாரண பாரிச வாயு முதலிய நரம்பு சம்பந்த மான வியாதிகள் உண்டா கின்றன," என்று கூறுகிறார்.

ஜர்மெனி நாட்டில் 18 முதல் 35 வயதுக்குள் மரணமடைகிற ஆண் பிள்ளைகளில் பாதிப்பேர் சுருட்டு, பிடிப்பதா லுண்டாகும் கெடுதிகளி னாலேயே மடிகிறார்க ளென்றும், சுருட்டு இரத்தத்தையும், பற்களையும், கண்களையும் எரித்துவிடுகிற தென்றும் ஜர்மெனியிலுள்ள டாக்டர்கள் தங்கள் வைத்தியப் பத்திரிகைகளில் கூறியிருக்கிறார்கள். விவசாயிகள் கூடப் புகையிலை, அது உற்பத்தியாகிற பூமியை விஷமிக்கச் செய்கிறது, அல்லது மற்ற பயிர்கள் செய்வதைவிட அப்பூமியின் சத்தை யதிகமாய்க் குறைத்துவிடுகிற தென்று கூறுகிறார்கள். பிரைடன் நகரத்திலுள்ள பிர சித்தி பெற்ற ஒரு டாக்டர் சுருட்டு பிடிப்பதால் பாரிசவாயு வியாதி யடை ந்தவர்கள் 16 பேரை 6 மாதகாலத்திற்குள் தாம் கண்டதாக வெளியிடுகி றார். இவ்வாறிருப்பதால், நமது சிறுவர்கள் சுருட்டு பிடிக்கும் கொடிய வழக்கத்தைக் கூடிய சீக்கிரத்தில் நாம் நிறுத்திவிட்டால்தான் நம் சந்ததி யார் க்ஷேமமடைவார்கள்.

புகையிலைச் சுருட்டு பிடிப்பதனா லுண்டாகும் தீங்குகளைக் கவனித்து நாகரீக நாட்டாரில் சிலர், சிறுவர்கள் சுருட்டு பிடிப்பதைச் சட்டத்தினால் நிறுத்திவிட முயற்சி செய்கிறார்கள். அமெரிகாவி லுள்ள அனேக இராஜ் ஜியங்களில் வயது திட்டம் ஏற்படுத்தி, இந்த வயதிற் குட்பட்டவர்களுக்குச் சிகாரெட், சுருட்டு, புகையிலை விற்போர்க்குக் கடின தண்டனை விதிக்கப் படுமென்று சட்டம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

16 வயதிற்குட்பட்ட சிறுவர்கட்கு மூத்தோர் கைப்படச் சீட்டுக் கொண்டு வந்தாலன்றிப் புகையிலையாவது சிகாரெட்டாவது சுருட்டாவது விற்கலாகா தென்று நார்வே தேசத்தில் சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிற தென்று அறிகிறோம். சட்ட சபைகளில் பிரதி நிதிகளா யிருக்கும் நம்ம வரிற் சிலர் இவ்விஷயத்தைப் பற்றிக் கூடிய சீக்கிரத்தில் முயற்சி யெடுத் துக் கொள்வார்கள் என்று நம்பிக்கை யோடு எதிர் பார்க்கிறோம்.

சுருட்டு பிடிப்பவர்களுக்கு உதவி செய்யச் சற்றும் பிரிய மில்லா விடி னும், அவர்களுக்குச் சில குறிப்புகளைக் கூற விரும்புவதால் கீழ்க்கண்ட விதிகளை யேனும் அனுசரிக்கும்படி வற் புறுத்துகிறேன்:—

1. காலைப் போசனத்திற்கு முன்பாவது, வயிறு காலியா யிருக்கும்போதாவது ஒரு போதும் சுருட்டு பிடிக்காதே.

2. தேகத்திற்குச் சிரமத்தை யளிப்பதாகிய ஓடுதல், துவி சக்கர வண்டியில் சவாரி செய்தல் முதலிய தொழில்களைச் செய்யும் காலங்களில் ஒரு போதும் சுருட்டு பிடிக்காதே.

3. சுருட்டுப் புகையை யொருபோதும் நாசி வழியாய்ச் செல்ல விடாதே.

4. சுருட்டுப் புகை கண்களிலாவது நாசியிலாவது படாதபடி கூடிய வரையில் எச்சரிக்கையா யிரு.

சுருட்டு பிடிக்கும் சுங்கான் குழாய் எவ்வளவு நீள மிருக்கிறதோ அவ்வளவும் நல்லது.

5. ஐந்தில் நான்கு பாகம் பிடித்தான வுடனே மிச்சமாயுள்ள ஸிகாரெட் அல்லது சுருட்டை எறிந்து விடு.

6. சுருட்டு பிடித்தானதே, ஒரு கிண்ணத்தில் (டம்ளர்) ஒரு தேக்கரண்டி யளவு சுத்தமான உப்பைக் (டேபில் ஸால்ட்) கரைத்து அச்சலத்தால் வாயை நன்றாய்க் கழுவு.

7. எல்லா வித சுருட்டுகளையும் விட நமது நாட்டில் பிடிக்கப்படும் ஹூக்காவே சிறந்ததென்று மதி. ஏனெனில் அதில் வரும் புகை வாயில் வந்து சேருமுன் ஜலத்தில் பிரவேசித்து நீண்ட குழல் வழியாய் வருகிறது. ஜலத்தில் நுழைந்து வரும்போது புகையிலையிலுள்ள நிகோடைன் பாஷாணத்தில் பெரும் பாகம் அச்சலத்தில் கரைந்து போகிறது.

———

குறிப்பு:—மாணவர்கள் முதலிய சிறுவர்களும் பெற்றோர்களும் சிறந்த அனுபவ முடைய ஆயுர் வேத பண்டிதரான மேற்கண்ட கனவான், நம் நாட்டாரின் க்ஷேமத்தைக் கருதிக் கூறும் இவ் விஷயங்களைப் பன் முறை வாசித்து, இத்தீய வழக்கத்தை யொழிக்க முயல வேண்டுமாய் வேண்டிக் கொள்கிறோம்.

இலங்கை துரைத்தனத்தாரும் இக்கொடிய வழக்கத்தை நிறுத்தி விடச் சட்டம் ஏற்படுத்தி யிருப்பதாக அறிகிறோம். இங்குள்ள **சட்டசபைகளிலிருக்கும் நமது கனவான்கள்** நம் சந்ததியாரின் நன்மையைக் கருதி இனியேனும் இதைப்பற்றி சிரத்தை யெடுத்துக் கொள்வார்களாயின் பெரும் புண்ணியத்தைப் பெறுவார்கள் என்பது திண்ணம்.

**பத்திரிகாசிரியர்.**

---

## பொய்ம்மை

ஒருவன் சொல்லிய சங்கதி அவன் கூறியவாறு நடைபெறாதிருந்தால் அது பொய்கூறியதாகும். அவன் அதை மனதாரப் பொய்யென்

றறிந்து கூறியிருக்க வேண்டும். வருங் காரியத்தை யோசித்து ஒருவன் உத்தேசத்தின் மேல் தீர்மானம் சொல்லி, அதன் பின் அவ்வாறு அக்காரியம் நடை பெறுதிருப்பின் அது பொய்யாகாது. ஒரு பொய் கூறுவதன் முன்னர் ஒருவன், நான் இன்னவாறு நடந்ததை இன்னவாறு மாற்றியோ அல்லது இல்லை என்றோ சொல்ல வேண்டும் என்று சிந்தியாது கூறமுடியாதாகலின், பொய் கூறுவதற்குமுன் அப் பொய்யைச் சிந்தித் திருத்தல் வேண்டும். யோசித்த தோடு அவன் அடங்கி விடுவனேல் அது பொய் யாகாது.

நாம் பேசக்கூடிய சொற் குற்றங்கள் பலவற்றுள்ளும் இப் பொய்ம்மையே மிகவும் கொடியது. ஆதல் பற்றியேஆன்றோரும் விரதங்களி லெல்லாம் பெரியது பொய் சொல்லா விரதமே என்றும் அருளி இருக்கின்றனர்.

பொய்யானது, "காமம், களவாடல், கள்ளுண்டல், பொய்ம் மொழிதல், ஈதன் மறுத்தல்" என்ற பஞ்சமா பாதகங்களி லொன்றாகச் சொல்லப்பட்டிருப்பினும், அவற்றுள் தலைமைபெற்றதும் மிகக்கொடியதுமானது இப் பொய்யே யாகும். சகல விதமான பாவங்களையும் அடையச் செய்து அவைகள் நம்மை விட்டு நீங்காமல் மேலும் மேலும் விருத்தியாய்க் கொண்டிருக்குமாறு செய்வது இப் பொய்யே யாகும். நாம் முதலில் சொன்ன ஒரு பொய்யானது வெளிப்பட்டு விடும்போ லிருந்தால்,அப் பொய்யை மறைக்கமற்றும் பல்வேறு பொய்கள் சொல்ல வேண்டி நேரிடுகின்றதனால் பல புதிய பாவச்செயல்களும் நம்மை வந்து அடைகின்றன. பஞ்சமா பாதகங்களைச் சேர்ந்த மற்ற நான்கும் பாவச் செயல்களே யாயினும், அவைகளெல்லாம் ஒருவன் உடல் வலியாலும், துணை வலியாலும், பொருள் வலியாலும் செய்தல் கூடுமே யன்றிப் பொய்யைப் போன்று ஒரு வலியு மில்லாது செய்யற் பாற்றன்று. நிற்க, ஒருவன் காமமாகிய பாவத்தைச் செய்ய வேண்டு மென்றால், அவனுக்கு விருப்புத்தை உண்டாக்கத் தக்க பெண் ஒருத்தி வேண்டும்; மற்றும் இடம், காலம் முதலிய சௌகரியங்கள் கிடைத்தா லல்லாது அவன் அப் பாவத்தைச் செய்வதற்குத் தலைப்படான். அவ்வாறே களவாடல், கள்ளுண்டல், ஈதன் மறுத்தல் முதலிய பாவச் செய்கைகளும், துணை, காலம், பொருள், சொல் வலிகளிருந்தாலல்லது நடை பெறா என்பது திண்ணம். இவைகளைப் போன்றே மற்றும் பல பாவச் செயல்களும் சில துணைகளை ஒட்டியே நிகழ்வதாய் இருக்கின்றன. ஆனால் இப் பாவமாகிய பொய்பேசும் கொடுஞ் செயலோ யாதொரு துணையு மில்லாது மனோ வுணர்ச்சியாலேயே செய்யக் கூடியதாகி மற்ற பாவச் செயல்களை வளர்க்கக் கூடியதாகவு மிருக்கின்றது.

அந்தோ ! நந்தம் நேயர்காள் !! பொய்ம்மையின் கொடுமையை அளவிடற்கரிதெனச் சாற்றவும் வேண்டுமோ ?

இதை விளக்க என் அனுபவத்தில் கண்ட சம்பவமொன்றை வரைகிறேன்:—

ஓர் கால் ஓர் கலாசாலையின் வருடாந்தரப் பரீட்சைகேள்விப் பத்திரங்களை அவ்வூரின்கண் உள்ள அச்சியந்திர சாலையில் அச்சியற்றிக்

கொண்டிருக்குங்கால், அக் கலாசாலையின் ஓர் மாணவன் அவ் வியந்திர சாலையில் எழுத்துப் புனைவோனிடம் ஓர் பொய் கூறிக் கேள்விப் பத்திரங்களை வாங்கி வெளிப் படுத்தி விட்டனன். பின் அப்பள்ளிக்கூடத் தலைமை உபாத்தியாயருக்கு இச் சங்கதி தெரிந்ததன்மேல் அவர் அம் மாணவனை வினவினர். அவன் அப் பொய்யை மறைக்கப் பல வேறு பொய்களைச் சொல்லிக் கடைசியாகக் கலாசாலையினின்றும் நீக்கப்படத் தக்க அவ்வளவு ஆபத்தில் சிக்கிக் கொண்டான்.

நேயர்களே! ஓர் சிறிய பொய்க்காக அவன் வாழ் நாள் பூராவும் அனுபவிக்க வேண்டிய பெருங் கஷ்டம் எற்பட்டு விட்டது.

இப் பொய்யை உரையால் வெளியிடுவதைக் காட்டிலும் ஒழுக்கத்தால் நடிப்பதே மிகக் கொடிது. அனேகர் மன மொன்று, சொல் லொன்று, வான்பொருளு மொன்ருக, "நெஞ்சிற் றுறவார் துறந்தார் போல் வஞ்சித்து — வாழ்வாரின் வன்கணு ரில்." என்ற ஆன்ருேர் வாக்கிற் கேற்பப் பஞ்சமா பாதகங்களைச் செய்து கொண்டு மேலுக்கு முற்றுந்துறந்தோர் போல் விபூதி ருத்திராக்க மணிந்து சிவ வேட தாரிகளாய் "சிவ, சிவ". என்று கூறிக்கொண்டு வஞ்சவேடம் பூண் டலைகின்ருர்கள். அந்தோ! இவர்கள் பின்னர் அடையப்போகும் கஷ்டங்கள் எண்ணற் கிடமாகுமோ?

சிலர் விளையாட்டுக்காகப் பொய் கூறுவது சகஜம். அதுவும் கூடாததே. எனெனில் அது பின்னுல் ஒரு கால் நிஜமாக எற்பட்டு ஆருத் துயரை விளைவிக்க எது வாகின்றது. இதற்குப் புலி புலி யென்ற இடைச் சிறுவன் சங்கதியே போதுமான திருட்டாந்த மாகும்.

ஆகலின், நண்பர்காள்! நாம் மனம், மொழி, மெய்களால் பொய்யாது வாழ்ந்து சாக்ஷாத் எம் பெருமானது கிருபாகடாக்ஷத்திற்குப் பாத்திரர்களாகி இன்புற்று வாழ்வோமாக.

ஓம்தத்ஸத்.

வே. கி. மீனுக்ஷி சுந்தரம்,
உடுமலைப் பேட்டை.

---

**குறிப்பு**:—காணுததைக் கண்டதாய்க் கூறுவதும், ஒன்றைக் கண்டு அதை வேருென்ருய்க் கூறுவதும், கொஞ்சத்தை யதிகமாகவும், அதிகமாயிருப்பதைக் குறைத்தும் கூறுவதுமாகிய இவை யாவும் பொய்யின் பாற்பட்டவையே யாகும். ஆனுல் இவற்றை யன்னியில் இன்னும் சில செய்கைகளும் பொய்யைச் சேர்ந்தவைகளே யாகும்.

1. நாம் கூறுவது உண்மையே யாயினும் அதைக் கேட்போர் நாம் கேலிக்குக் கூறுவதாய் அல்லது கோபமாய்க் கூறுவதாய்க் கருதியாவது, வேறெந்தக் காரணத்தாலாவது, நாம்கூறுவதுமெய்யல்லவென்றுநினைக்கும் வண்ணம் உத்தேசித்துக் கூறுவதும் பொய்யே யாகும். எவ்வாறெனின்:— கந்தன் ஒரு தகாத காரியத்தைச் செய்து விட்டு இராம

னிடம் வந்து தன்னை மறைத்து வைக்கும்படி வேண்டிக் கொள்கிறான். இராமன் தன் அறையின் மேல்பாகத்திலுள்ள ஒருமறைவான பரணைமேல் கந்தனை ஒளித்து வைத்துவிட்டுத் தான் அறையில் உட்கார்ந்து கொண்டு எழுதிக் கொண்டிருக்கிறான். சற்று நேரங்கழித்துச் சிலர் கந்தனைத் தேடிக் கொண்டு வந்து, இராமனை நோக்கி "கந்தன் உன்னிடம் வந்தானா?" என்று கேட்கிறார்கள். இராமன் "கந்தனா! என் தலை மேலிருக்கிறான்" என்கிறான். இதைக் கேட்ட அந்த ஆட்கள் இவன் கேலியாய்க் கூறுகிறான் என்று கருதி நகைத்துக் கொண்டே போய் விடுகிறார்கள். நாம் இவ்வாறு கூறினால் அவர்கள் நாம் கேலிக்குக் கூறியதாய்க் கருதி அதை நம்பாமற் போய் விடுகிறார்கள் என்று இராமன் உத்தேசித்தே யிப்படிக் கூறியதால், இவன் கூறியது உண்மையே யாயினும் பொய் கூறியதே யாகும்.

ஒருவன் ஒருவர் வீட்டிலிருந்த ஒரு நகையைக் களவாடிவந்து விட்டுத் தன் வீட்டில் உட்கார்ந்திருந்தான். சொந்தக்காரன் வந்து "நீ என் வீட்டிற்கு வந்திருந்தாயே, மேஜை மேல் நகையிருந்ததைப் பார்த்தாயா?" என்கிறான். திருடியவன் "ஆம் அய்யா. திருடுவதே யென் தொழில். உங்கள் நகையைக் களவாடி வந்து இதோ மடியில்தான் வைத்துக் கொண்டிருக்கிறேன்" என்கிறான்.

அவன் கூறியது முழுமையும் உண்மையே யெனினும், நகையின் சொந்தக் காரன் இவன் கோபத்தால் அப்படிக் கூறுவதாய் எண்ணி "வந்திருந்தாயே பார்த்தாயோ வென்று கேட்டேன். அதற்கேன் கோபித்துக் கொள்கிறாய். நீ திருடிக் கொண்டா யென்று நான் கூறினேனா" என்று சொல்லிக் கொண்டே போய் விடுகிறான். இதிலும் அவன் கூறியது மெய்யே யெனினும் அது பொய் கூறியமாதிரியே. ஏனெனில் அப்படி ஏமாற்றி விட வெண்ணியே அவன் அவ்வாறு கூறினான்.

2. சில சந்தர்ப்பங்களில் ஒருவர் சொல்வதை மறுத்துக் கூறாமல் பேசாதிருப்பதும் பொய் கூறிய மாதிரியே யாகும்.

எப்படி யெனில்: — நீ உண்மையில் மெட்ரிகுலேஷனே பரீட்சை செய்திருக்கிறாய். உன்னோடு கூட விருந்த நண்பன் ஒருவன் மூன்றாவது மனிதன் ஒருவனை நோக்கி உன்னைச் சுட்டிக் காட்டி "இதோ இவர் தாம் நான்கூறிய என் சினேகர். இவர் பி. ஏ. பட்டம் பெற்றவர்" என்கிறான். அல்லது நீயில்லாச் சமயம் உன் நண்பன் கூறியதைக்கேட்ட ஒருவன் உன்னைப் பார்த்த போது "ஆ! உன்னைப் பற்றி உன் நண்பர் இரங்கையர் கூறினார். நீ சிறுவயதாயிருந்தும் இதற்குள்ளாகவே பி. ஏ. பரீட்சையில் தேறி விட்டது மிக்க வியப்பே" என்று உன்னைப் புகழ்கிறான்.

இச் சந்தர்ப்பங்களில் நீயுடனே "நான் பீ. ஏ. பட்டம் பெறவில்லை. தாங்கள் நினைப்பது தவறு" என்று கூறாமல் மௌனமாய் இருந்து விடுவாயாயின் நீ பொய் கூறிய மாதிரியே. மேலும், நீ அதைக் கௌரவம் என்று கருதி மறுக்காமல் இருந்து விடுகிறாய். ஆனால் அந்தோ அது பின்னால் உனக்கு அதிக அவமானத்தை யுண்டாக்கும். எப்படி யெனில்

உண்மை யொருநாள் எப்படியும் வெளி வந்து உன்னை யிழி குணமுடைய வன் என்று யாவரும் அவமதிக்கச் செய்யும். அதோடு, உன்னை யன்று புகழ்ந்து பேசிய மனிதன், நீ பி. ஏ. என்ற நம்பிக்கையால், ஒரு சபையில் கல்வி விஷயமாய் உன்னை யம்பலத்தில் இழுத்து விட்டால் எவ்வளவு அவ மானம் நேரிடும். அறிவாளி இத்தகைய பொய்க் கெல்லாம் அஞ்சி நட த்தலே நன்மை யளிக்கும்.

**பத்திரிகாசிரியர்.**

---

## கற்கோட்டை—நாவல்

(174-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

முனிலிங்கும் அவன் வீரர்களும் அங்கு வந்ததும் குதிரைகளை நிறுத் தினார்கள். முனிலிங் கேடையத்தை நோக்கி ஹோட்டலில் இடமிருக் கிறதா வென்றான். அச்சமயம் உள்ளிருந்து வந்த ஹோட்டல்காரன் "ஆகா! இராணியின் உத்தியோகஸ்தர்களுக்குக் கூட எப்போதேனும் இடம் இல்லையென்று கூறியதுண்டா?" என்றான்.

முனிலிங் தன் ஆட்களை நோக்கி நீங்கள் தற்சமயம் ஹோட்டலி லேயே யிருங்கள் என்று கூறிவிட்டு, ஹோட்டல்காரனை நோக்கி ஸர்தார் அமிர்தநாயகம் இருக்குமிடம் எங்கே யென்றான். ஹோட்டல்காரன் "சமீபத்திலேயே அவர் சகோதரிவீடிருக்கிறது. அங்குதான் அவர் இருப் பது. தங்களுக்கு வழிகாட்ட......ஆ இதோ இந்த வாலிபர் காட்டுவார். இவரும் அங்குதான் செல்கிறார்" என்று கேடையத்தைச் சுட்டிக்காட்டி னான். கேடையம் உடனே முனிலிங்குக்கு மிக்க மரியாதையாய் வந்தன மளித்து "ஆகா வாருங்கள். நான் அழைத்துச் செல்கிறேன்" என்றான்.

உடனே இருவரும் அங்கிருந்து புறப்பட்டுச் சற்றுதூரம் சென்றதே முனிலிங் நின்று கேடையத்தை நோக்கி மெதுவாய் "நீ ஸர்தார் ஆட்க ளில் ஒருவனுக்கும்" என்றான். கேடையம் ஆம் என்றான். முனிலிங் "சரி ஸர்தாருடைய சகோதரியின்வீட்டில் யாரார் இப்போதிருக்கிறது?" என்றான்.

**கேடையம்:—**"யாரைக் கேட்கிறீர்கள்? எப்போதுமே யங்கிருக்கிறவர் களா அல்லது இச்சமயம்......" என்பதற்குள்,

**முனிலிங்:—**"நீ பயமின்றிக் கூறலாம். எனக்கு முன்னமேதெரியும். கண் ணபிரான் பிரபு, திரவியசிங்கம் பிரபுவின் தம்பிகள் இருவர் ஆக மூவ ரும் இருக்கிறார்கள். நடந்திருக்கும் பெருஞ்சூது ஸர்தாருக்குத் தெரி யாது..." என்றதே,

**கேடையம்:—**"ஆம் ஆம் இருக்கிறார்கள். என்னால் ஆகவேண்டிய வேலை யைக் கூறினால் நான் மிக்க சந்தோஷமாய்ச் செய்வேன்" என்றான்.

முனிலிங் இரகசியமாய் "நான் வந்த விஷயம் நிறைவேறுவதற்காக ஸர்தாரை முன்னாடி நான் இரகசியமாய்க் கண்டு பேசவேண்டும். யாருக் கும் தெரியலாகாது; முக்கியமாய் அத்துரோகிகள் மூவர்க்கும் கொஞ்ச

மேனும் தெரியலாகாது. அம்மாதிரி ரகசியமாய் அவரை நான் காணும் படி செய்யவேண்டும். உனக்கு இதற்காக நல்ல பரிசளிக்கப் படும்'' என்றான்.

கேடையம் சற்றுநேரம் ஏதோ யோசிப்பவன்போல் அபிநயித்துப் பிறகு "ஆ, சரி, வாருங்கள் அப்படியே சந்திக்கச் செய்கிறேன்'' என்று கூறி, முனிலிங்கை ஒரு சந்துவழியே யழைத்துச் சென்றான். அச்சந்தின் கடைசியில் வேறொரு சந்து திரும்புகிறது. அது இரத்னம்மாள் வீட்டின் பக்கமாய்ச் சென்று அவ்வீட்டின் சமையல் கட்டிடம் இருக்கும் தோட்டத்தை நோக்கிச் செல்கிறது. அச்சந்திலிருந்து வீட்டிற்குட்செல்ல ஒரு சிறுவழி யிருக்கிறது. அத்தோட்டத்திலுள்ள கட்டிடத்தின் ஒரு அறையிற்றான் கேடையமும் கவசமும் போசனம் செய்துகொண்டிருந்தது. கேடையம் முனிலிங்கை அவ்வழியா யழைத்துக்கொண்டுபோய் தானும் கவசமுமிருக்கும் அறைக்குப் பக்கத்தறையில் அவனை யுட்கார வைத்துவிட்டு "தாங்கள் சற்றுநேரம் இங்கேயேயிருந்தால் நான்போய் ஸர்தாரை யனுப்புகிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றான். அவன் எண்ணியபடி வேலைக்காரர் அனைவரும் சமையல்வேலையி லிருந்தபடியால் இவர்கள் உள்ளேவந்ததே யொருவரும் காணவில்லை.

கேடையம் முனிலிங்கைவிட்டுப் பிரிந்ததும், கண்ணபிரானுடைய பிரயாணப்பை வைத்திருக்கும் இடத்திற்குச் சென்று அதை யெடுத்துக்கொண்டு, கவசமிருக்கும் அறைக்குச்சென்று பையையவிழ்த்துக் கண்ணபிரானுடைய உடுப்பையெடுத்து; கவசத்தைநோக்கி "சீக்கிரம் உன் உடையைக் களைந்துவிட்டு இந்த வுடையை யணிந்துகொள்'' என்றான்.

கவசம் மிக்க வியப்படைந்து, "என்ன சமாசாரம்? பிரபுவின் உடை......'' என்றான்.

கேடையம் சுருக்கமாய் நடந்தசங்கதியைக்கூறி, "நாம் இப்போது துணிகரமாய் வேலைசெய்யவேண்டும். இன்றேல் பெரிய ஆபத்தாய் முடியும். முனிலிங் ஸர்தாரை யிரகசியமாய்க் காணவேண்டுமாம். இப்போது ஸர்தார் எங்கோபோயிருக்கிறார். நீ யவருடைய தம்பி மகனோ அண்ணன் மகனோ. அவரால் ஆகவேண்டிய வேலை யெதுவாயினும் அவருடைய பிரதிநிதியாய் நீ செய்கிறவன், தெரிகிறதா?'' என்றான்.

**கவசம்.**—"ஓ சரி சரி. தெரிந்துகொண்டேன்; ஒரு சமயம் ஸர்தாரே வந்துவிட்டால்?'' என்றான்.

**கேடையம்.**—"நீ அந்த அறையில் அவனிடம் பேசிக்கொண்டே எச்சரிக்கையாயிரு. நான் இந்த அறையின் கதவைத் திறந்துவைத்துப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். பின்னால் எப்படி நேர்ந்தாலும் ஒருகை பார்த்துக்கொள்ள வேண்டியதே'' என்றான்.

அவ்வாறே கவசம் பிரபுவின் உடையை யுடுத்துக்கொண்டு முனிலிங் இருக்கும் அறைக்குள் நுழைந்தான். கேடையம் தன் அறையின் கதவைத் திறந்து விட்டுத் தாழ்வாரவழியைப் பார்த்தபடி யிருந்தான்.

———

# " ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்

சித்தார்த்திஞு மாசிமீ—சாலிவாகனம் 1841-கலியுகாதி 5020

பசலி 1328-29— கோல்லம் 1094-95 - ஹிஜரி-1338-

இங்கிலீஷ் 1920-ம்ஞு பிப்ரவரிமீ—மார்ச்சுமீ

| மாசிமீ | பிப்ரவரிமீ / 1920ஞு மார்ச்சுமீ | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 13 | வெ | நவ-32-41 | அனு-20-57 | சித்த-60 | ............... |
| 2 | 14 | ச | தச-37-56 | கேட்-27-24 | சி-60 | வடக்கே பிரயாணம் |
| 3 | 15 | ஞா | ஏ-42-50 | மூல-33-33 | அ-34 சி | கிழங்குகள் வெட்ட |
| 4 | 16 | தி | து-47-10 | பூரா-39-40 | சி-40 ம | நவதான்யங்கள் விற்க |
| 5 | 17 | செ | திர-50-28 | உத்-43-51 | சி-60 | தெற்கே பிரயாணம் |
| 6 | 18 | பு | ச-52-41 | திரு-47-34 | சி-48 ம | ஏர்கட்ட, விதைக்க |
| 7 | 19 | வி | ●-53-27 | அவி-49-55 | சி-50 ம | ............... |
| 8 | 20 | வெ | பிர-52-51 | சத-50-51 | சி-60 | பூமிகொள்ள |
| 9 | 21 | ச | து-51-17 | பூர-50-58 | ம-51 சி | ............... [ணம் |
| 10 | 22 | ஞா | தி-48-33 | உத்-49-45 | அ-60 | விவாஹம், அன்னபிராச |
| 11 | 23 | தி | ச-44-45 | ரே-47-40 | சித்த-60 | விதை விதைக்க |
| 12 | 24 | செ | ப-40-14 | அசு-44-48 | சித்த-60 | கிழக்கே பிரயாணம் |
| 13 | 25 | பு | ஷ-35-3 | பர-41-19 | சி-41 அ | ஔடதம் கொள்ள |
| 14 | 26 | வி | சப்-29-29 | *கிரு-37-28 | ம-60 | ............... |
| 15 | 27 | வெ | அ-23-40 | ரோ-33-24 | ம-60 | கரிநாள் |
| 16 | 28 | ச | நவ-17-46 | மிரு-29-19 | சித்த-60 | கரிநாள் |
| 17 | 29 | ஞா | தச-12-3 | திரு-26-1 | சித்த-60 | கரிநாள் |
| 18 | 1 | தி | ஏ-6-45 | புன-22-3 | அ-22 சி | விவாஹம், சீமந்தம் |
| 19 | 2 | செ | து-1-52 | பூச-19-8 | சித்த-60 | நர்த்தனம் செய்ய |
| 20 | 3 | பு | ச-54-34 | ஆயி-16-59 | சித்த-60 | கிணறு கட்டிடம் கட்ட |
| 21 | 4 | வி | ○-52-26 | மக-15-48 | அ-16 சி | ............... |
| 22 | 5 | வெ | பிர-51-28 | பூர-15-44 | சி-60 | பைசாசு நிவர்த்தி செய்ய |
| 23 | 6 | ச | து-51-51 | உத்-16-54 | ம-60 | |
| 24 | 7 | ஞா | தி-53-34 | அஸ்-19-22 | அ-19 சி | |
| 25 | 8 | தி | ச-56-20 | சித்-22-59 | சி-23 அ | |
| 26 | 9 | செ | ப-60-0 | சுவா-27-39 | சி-28 ம | |
| 27 | 10 | பு | ப-0-11 | விசா-33-13 | சி-60 | |
| 28 | 11 | வி | ஷ-4-53 | அனு-39-22 | சி-60 | |
| 29 | 12 | வெ | சப்-9-58 | கேட்-45-48 | ம-46 அ | |

| | | | |
|---|---|---|---|
| | கே | | |
| ர-4 | 14 மீ-பு.<br>23 கும்-பு.<br>5 மக-சுக்.<br>29 கு-சு. | | குரு |
| | | | சனி |
| சு | | செ<br>ராகு | |

Printed and Published by N. Munisawmi Mudaliar at the "Ananda Bodhini" Press, 15, Venkatesa Maistry Street, Madras.